பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 09 புதன்கிழமை (24.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:028

# பொருளாதார மையங்களை புலிகள் இலக்கு வைக்கலாம்?

## 'ரொய்ட்டர்' பேட்டியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்



கிளிநொச்சி, டிசெம்பர் 24

இலங்கை அரசின் பொருளாதாரக் கட்டுமானங்கள் அழிக்கப்படும்போது தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை பலவீனப்படுத்தப்படும். எனவே, அதற்காக அரசின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் புலிகளின் இலக்குகள் அமையலாம்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நத்தார் பூசைகளுக்காக இன்று இரவு ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.24

நத்தார் தினத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை நள்ளிரவு தேவாலயங்களில் நடைபெறும் விசேட பூசை மற்றும் பிரார்த்தனைகளில் மக்கள் பங்குபற்ற வசதியாக இன்று இரவு ஊரடங்கு நீக்கப்பட்டுள்ளது என்று பலாலி ஊடகப்பிரிவு நேற்று அறிவித்தது.

தீவகம் உட்பட குடாநாடு முழுவதும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியை மீட்ட இரண்டொருநாளில் வடக்கின் கேந்திர பகுதியைப் பிடிப்போம்

### இராணுவத் தளபதி சொல்கிறார்



கொழும்பு, டிசெ.24

தற்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டுவரும் போரை நிறுத்தும் எண்ணம் எதுவுமே இராணுவத்துக்கு இல்லை என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு போதுமான உணவு, மருந்து, தங்குமிட வசதிகளை செய்க!

### ஐ.நா.அதிகாரி அரசுக்குக் கடிதம்

ஜெனிவா, டிசெ.24

போர் காரணமாக வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படும் உணவு மற்றும் மருந்து தங்குமிட வசதிகள், சுகாதாரத் தேவைகள் போதுமானவையே அல்ல.

தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் 2 லட்சம் தொடக்கம் 3 லட்சம் வரையான மக்களுக்குத் தேவையான - சகலருக்கும் போதுமான - மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை அரசாங்கத்துக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வற்புறுத்தியுள்ளார் இடம் பெயர்ந்த மக்களின் மனிதஉரிமைகளைப் பேணுவதற் கான செயலாளர் நாயகம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு நகரை அண்டிய பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்வு

வவுனியா, டிசெ.24

முல்லைத்தீவு நகரை சூழவுள்ள பகுதிகளில் தொடர்ந்து ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதால் அந்தப் பகுதியில் இருந்து மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

நகரை அண்டிய பகுதிளில் நேற்றும் பெரும் எண்ணிக்கையான ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் மக்கள் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை சர்வதேசக் குழு யாழ். கிளையின் பணியாளர் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகத்துக்குச் சமீபமாகச் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், டிச.24

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் பணியாளர் ஒருவர் நேற்றுக் காலை 7.10 மணியளவில் யாழ். நல்லூர் கோவிலிலிருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகத்திற்கு முன்பாக இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வடமராட்சி, கரவெட்டி விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த சேர்ந்த இரண்டு பிள்ளைகளின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னப்பரந்தன் தம்வசம் என்கிறது இராணுவம்



கொழும்பு,டிசெ. 24

பரந்தன் மேற்குப் பகுதியில் முன்னேறும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் கடும் மோதல்கள் இடம் பெற்றன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மோதல்களை அடுத்து பரந்தனில் இருந்து 6கிலோமீற்றர் தொலைவில் உள்ள சின்னப் பரந்தன் பகுதியைப் படையினர் நேற்றுத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர் என்றும்அவர் சொன்னார்.

இராணுவப் பேச்சாளர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையின் நேற்றைய விசேட கூட்டத்திலும் பெற்றோல் விலையில் மாற்றம் செய்வது குறித்து முடிவில்லை

### சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படுமாம்

கொழும்பு, டிசெ.24

பெற்றோல் விலை சம்பந்தமாக முடிவு செய்வதை அமைச்சரவை மீண்டும் ஒத்திவைத்துள்ளது. இது குறித்து ஆராய்வதற்கென விசேடமாக நேற்றுக் கூடிய அமைச்சரவை இவ்விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதென முடிவு செய்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் உயர்நீதிமன்ற தீர்ப்பை ஆராய்ந்து முடிவு ஒன்று மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தீர்க்கமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றபின்னர், மீண்டும் ஜனவரி மாதம் ஏழாம் திகதி நடைபெறும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் உத்தரவிட்டால்தான் நாடாளுமன்றைக் கூட்டலாம்

### ஐ.தே.கட்சியின் கோரிக்கைக்கு சபாநாயகர் விளக்கம்

கொழும்பு, டிச. 24

பிரதமர் உத்தரவிட்டால் மட்டுமே நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியும் என்று சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பாக விவாதிக்க உடன் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஐ.தே.கட்சி பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமை பற்றி சபாநாயகரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 14ஆவது சரத்தின்படி இவ்வாறான சூழ்நிலையில் திடீரென நாடாளுமன்றத்தைக் [illegible] பிரதமரால் உத்தரவிட முடியும் என்று சபாநாயகர் சொன்னார்.

ஆனால், ஐ.தே.கட்சி விடுத்திருக்கும் வேண்டுகோளை அடுத்து நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதமர் தனக்கு உத்தரவிடவில்லை என்றும் ,அவ்வாறு உத்தரவிட்டால் தன்னால் நாடாளுமன்றத்தை உடன் கூட்டமுடியும் என்றும் சபாநாயகர் மேலும் கூறினார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின்படி அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஆறாம் திகதி மன்றம் கூடும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தைக் கூட்டுவதா? அமைச்சரவையே முடிவெடுக்கும்!

### நழுவுகின்றார் பிரதமர்

கொழும்பு, டிச.24

நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு ஐ.தே.கட்சியால் பிரதமரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்ட கடிதம் பிரதமரால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடிதம் அடுத்தவாரம் வரும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றத்தை உரிய தினத்திற்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தொழிலாளர் கற்கை நெறிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகில் தொழிலாளர் கல்விச்சான்றிதழ், தொழிலாளர் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிவரும் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கலைப்பீட விரிவுரையாளர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் சான்றிதழ்களை வழங்க விருக்கிறார்.

கற்றை நெறிகளைப் பூர்த்தி செய்தோர் விவரம் வருமாறு:-

சான்றிதழ் கற்கைநெறி

என்.கணேசமூர்த்தி, எஸ்.சிவபாலச்சந்திரன், எஸ்.சிவகரன், என்.சுப்பிரமணியம், எம்.விவேகானந்தம், ஆர்.யோகநாதன், பி.பாஸ்கரன், கே.ஜெயக்குமார், எஸ்.இராசநாயகம், எம்.சதானந்தம், எஸ்.அமிர்தகடேஸ்வரன், எஸ்.கொன்சல்ரா, ரி.லிங்கேஸ்வரா, கே.இராஜேஸ்வரி, ஏ.தவமணி, என்.இலங்கேஸ்வரன், கே.கனகசபை, ரி.ரங்கநாதன், எஸ்.சிவலோகநாதன், எல்.சிவசெந்தூரன், கே.சிறீமேனன், ஜே.பவானி, என்.ஜெயராஜ், எம்.சிம்சன், ஏ.சுதர்சினி, எஸ்.தவரட்ணசிங்கம், ஜீ.திருக்குமார், வி.சுந்தரம், ஏ.பிரியந்தி, எஸ்.கோகுலதாஸ், வீ.லலிதாதேவி, எஸ்.மேரிநெயோரவின், ஏ.நந்தினி, ஜீ.பேராதரன், பீ.ரமேஸ், எஸ்.சிவகுமார், ஆர்.திலிபன், என்.விஸ்வரூபன், எஸ்.சுபாஜினி, பி.துசாந்தி.

டிப்ளோமா கற்கைநெறி

வீ.அழகதுரை, என்.கணேசமூர்த்தி, ரீ.குகனேஸ், கே.ஜெகதீஸ்வரன், எஸ்.கனகசபை, எஸ்.மோகனமுரளி, ரீ.பன்னீர்செல்வம், கே.பரராஜசேகரம், ஏ.ரஜனிக்காந்தன், கே.சின்னையா, ஏ.சிவபாலச்சந்திரன், வை.சிவஞானச்செல்வன், எஸ்.சிவராஜகுமார், கே.நரேந்திரன், வை.தருமநாதன், பீ.தவபாதம், கே.கனகராஜா. (1)


## நன்றி பகிர்கின்றோம்



26.11.2008 அன்று நடைபெற்ற புயல் காற்று கடும் மழை அனர்த்தத்தால் (நிஷா) பாதிப்புற்ற வேளை மக்கள் கடமையே தன் இறுதி மூச்சு என வாழ்கின்ற கௌரவ மாண்பு மிகு சமூக சேவைகள் அமைச்சர்

**திரு.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களின் பணிப்புடன் கடமை உணர்வுடன் கடமை புரிந்த வலி.வடக்கு சுன்னாகம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர்கள் திருஞானப்பிள்ளை சிவகுமார், தோழர்வேலு, இராசரத்தினம் ஜெயபாலசிங்கம், தோழர் அன்பு ஆகியோருக்கும் கடமை உணர்வோடும் இளமைத் துடிப்போடும் மக்கள் சேவையே மகேசன் சேவையென நினைத்து உரிய நேரத்தில் எம்மக்களுக்கு தேவையான வசதிகளையும் உலர் உணவுப்பொருள்களையும் எம் நிலைய மக்களுக்கு வழங்கிய வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திரு.எஸ்.முரளிதரன் அவர்களுக்கும் எந்த நேரத்திலும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நல்லமனதுடன் கடமையாற்றும் மல்லாகம் மத்தி J/213 கிராம அலுவலர் திரு.பூபாலசிங்கம் அவர்களுக்கும் எம் நலன்புரி வாழ் மக்கள் சார்பாக நன்றிகளையும் பாராட்டுக்களையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீதிவான் நலன்புரி நிலைய நிர்வாகிகள். மல்லாகம் மத்தி.



விற்பனையாகின்றது.

## யுனிலங்காஸ் வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர்

★ தவறு இல்லாத இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு.
★ 12 மாதமும் வர்ணத்தில் 60 g.s.m பேப்பரில் வடிவமைக்கப்பட்டது.
★ வீட்டுக்கு அழகு தரும் தெய்வீக வர்ணப்படங்கள் புதிய டிசைன்களில்.
★ விசேடமாக அம்மா பகவான் பக்தர்களுக்கு 24X17 size புதிய படத்துடன்
★ சென்னை வடபழனி முருகு பாலமுருகன் எழுதிய 12 இராசிக்கும் 12 மாதங்களுக்கும் உரிய தெளிவான பலன்கள் கலண்டரின் ஒவ்வொரு மாதத்தின் பின் பகுதியில்.

நாடு பூராகவுமுள்ள பிரபல புத்தகசாலைகளில்....

தொடர்புகளுக்கு:-

**யுனிலங்காஸ்,**
32, சென். அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு 13
077 6258778

கவனிக்கவும்:-

சென்ற ஆண்டு வெளியான யுனிலங்காஸ் கலண்டரின் படங்களைப் பாவித்து, போலியாகத் தயாரிக்கப்பட்ட பஞ்சாங்கக் குறிப்புக்களுடன், எமது கலண்டரின் வடிவமைப்புக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் யாழ். நகரில் விற்பனையாகின்றது என்பதை மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.


# வடமராட்சி வலயத்தில் சீருடைத் துணி வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ. 24

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான அடுத்தாண்டுக்கான சீருடைத் துணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் வலய நிதிக் கிளையில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

பாடசாலை அதிபர்கள் தேவையான துணிகளை குறித்த தினங்களில் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கணக்காளர் கேட்டுள்ளார். (1)


## மெசின் மைண்டர் தேவை

டேவிட்ச்ன் ஓவ்செட் அச்சு இயந்திரம் இயக்கக் கூடியமெசின் மைண்டர் உடன் தேவை. வடமராட்சிப் பகுதியில்வசிப்பர் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- மருதம் பதிப்பகம்,
நெல்லியடி மத்திய கல்லூரி வீதி,
தொ.எண் 226 3210, 0777 550966


## மகளிர் நிலையக் கருத்தரங்கு காரைநகரில்

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஒருநாள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை காரைநகரில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

''பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளைப் பாதுகாத்தலும் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விழிப்புணர்வும்'' என்ற தலைப்பில் அந்த அமைப்பு நடத்திவரும் கருத்தரங்குத் தொடரிலேயே இன்றைய கருத்தரங்கு ஏற்பாடாகியுள்ளது. (1)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்றலைட் 'புளூஸ்' அணியும் பற்றீசியன்ஸ் அணியும் [illegible] (1-86)


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 23.01.2009

**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in commerce.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary Scale |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs. 42,650 - 7x800 - 48,250/- p.m |
| Senior Lecturer Gr.II | Rs. 37,650 - 11x700 - 45,350/-p.m |
| Lecturer (Probationary) | Rs. 26.900 - 10x585 - 32,750/-p.m |

**Note: In addition to the above salary the following allowances will also be paid**

I. An academic allowance equivalent to 25% of basic salary.
II. Cost of living allowance of Rs. 2,875/- p.m.

**Statutory benefits**

I. Sabbatical leave entitlement for the holder of the post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the Universitiy System.
III. Gratuity Payments
IV. Employees Trust Fund benefits.
V. Free Medical Servics.

Application Forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order/postal order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board Should Channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only sort listed applicants will be called for an interview.

**Actg. Registrar,**
**University of Jaffna, Sri lanka.**
23.12.2008



## மனமுவந்து பாராட்டுகின்றோம்



**கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன்**

அவர்களது புகழ்பூத்த விஞ்ஞான ஆய்வுகளுக்காகவும், உலகளாவிய ரீதியில் ஆய்வாளர்கள் பலரால் இவை மேற்கோள் காட்டப்பட்டமைக்காகவும், தேசிய விஞ்ஞான சங்கத்தாலும், (NSF), எல்ஸ்வியர் (Elsevier) பதிப்பகத்தாலும் "இள விஞ்ஞானி" விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் அந்த உயர் விருது வழங்கப்பட்டமையை மனமுவந்து பாராட்டுவதுடன் இவர் மேன்மேலும் பல சாதனைகள் படைக்க இறையாசியை வேண்டுகின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஏல விற்பனை - மரங்கள்**

அண்மையில் ஏற்பட்ட சூறாவளியால் விழுந்த கீழ்வரும் இடங்களிலுள்ள மரங்கள் 30.12.2008 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன. ஏலத்திற் கலந்துகொள்ள விரும்புவோர் அந்நேரத்தில் நிர்வாகக்கிளைக்கு முன்பாக சமுகம் தரவும். வெற்றிபெறும் ஏலதாரர் அன்றைய தினமே பணத்தைச் செலுத்தி பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும். அவற்றைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை உரிய தரப்பினரிடம் பெறுவது அவர்களது கடமையாகும்.

இடங்கள்: நூலகம், சுகாதார நிலையம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம்.

பதில் பதிவாளர்.



## பகிரங்க ஏலவிற்பனை

*நகராட்சி மன்றம், பருத்தித்துறை*

பருத்தித்துறை நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான போட் இன, 36- 8226 இலக்க உழவு இயந்திரம் எதிர்வரும் 12.01.2009ம் திகதி ந.ப 12மணிக்கு பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவ்வாகனத்தினை ஏலத்தில் கொள்வனவு செய்ய விரும்புவோர் 12.01.2009 திகதி மு.ப. 11மணிக்கு முன்னர் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் ரூபா 10000.00 ஏலத்தில் பங்குபற்றுவதற்கான கட்டணம் ரூபா 500.00ம் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்வதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலதிக நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வாகனத்தினையும் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம், பருத்தித்துறை. 23.12.2008

(திரு.அ.அ.நடராசா) செயலாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை.


## மரண அறிவித்தல்கள்

### சிவசுந்தரலிங்கம் கெங்காதரன்



*(ICRC உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)*

வத்தனை, புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட சிவசுந்தரலிங்கம் கெங்காதரன் நேற்று (23.12.2008) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவசுந்தரலிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் மூத்த புதல்வனும் கிருஷ்ணபிள்ளை - காலஞ்சென்ற தெய்வானை தம்பதியரின் மருமகனும் உமாதேவியின் அன்புக் கணவரும் ரகுராஜ், துஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி - பாஸ்கரமூர்த்தி, மதிவதனி - பரமானந்தன், சுதாகரன் - சேஜுனா, காந்தன் - பாமினி, சிவந்தினி, சிவகுமார், உமாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவிகுமார், சிவகுமார், விஜயகுமார், காலஞ்சென்ற ராஜ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2008) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
T.P.: 060 - 221 6862,
077 3618649 (81110)

தகவல்:
குடும்பத்தினர்
கி.ரவிகுமார்
(நிர்வாக கிராம அலுவலர்).

### அம்பலவாணர் ஜெகநாதன்

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஜெகநாதன் நேற்றுமுன்தினம் (22.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவர் அம்பலவாணர் - இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் தெல்லிப்பழை, மகாதனையைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பிகாதேவியின் அன்புக் கணவரும் வாசுகி (அக்ஷன் எய்ட், கொழும்பு), சுதர்சன் (யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகம், கணக்குப் பகுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசங்கரின் (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்) அன்பு மாமனாரும் புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா), நாகேஸ்வரி (உடுவில்), இராமநாதன் (லண்டன்), இரட்னேஸ்வரி (ஓய்வுபெற்ற நூலகர், சுன்னாகம்), யோகநாதன் (சித்தன் கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆறுமுகம் (அவுஸ்திரேலியா), இராமநாதன் (கனடா), காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் தர்மநாயகி, அண்ணாமலை (கனடா), இராசலட்சுமி (அவுஸ்திரேலியா), இராமநாதன் (கனடா), கனகாம்பிகை (இணுவில்), கோபாலகிருஷ்ணன் (நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2008) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நூல்நிலைய வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
வாசுகி ஜெயசங்கர் (மகள்),
இ.பாலசிங்கம் (சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இன அழிப்பின் உச்சத்தை மூடி மறைக்கும் எத்தனங்கள்

''இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகின்றனர் எனக் கூறப்படுவதில் எந்தவித உண்மையுமில்லை.''

- இவ்வாறு மலேசியாவில் போய் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் ஜே. வி. பியின் எம்.பியும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன்.

இலங்கையின் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தும் மேலாண்மைத் திமிரிலும் பௌத்த - சிங்களப் பேரினவாத மமதையிலும் மிதக்கும் ஒரு கட்சியின் முந்தானையில் தொங்கிக் கொண்டிருப்பவரிடம் - அவர் தம்மையும் ஒரு தமிழனாக அடையாளப்படுத்திக் கொண்டாலும் கூட - இத்தகைய கருத்தைத்தான் எதிர்பார்க்க முடியும்.

பேரினவாதத்தினால் பெரும் இனவழிப்பை எதிர்கொண்டு, வரலாற்றில் மிகவும் மோசமான அழிவுகளை சந்தித் ணதபடி, சொல்லொணாத் துன்ப, துயரங்களில் சிக்குண்டு துவண்டுபோய்க் கிடக்கின்றது ஈழத் தமிழினம்.

''இந்த நாட்டின் வரலாற்றிலேயே இப்போதைய மஹிந்த அரசைப்போல கொடுமையான - கொடூரமான - அரசைத் தமிழர்கள் சந்தித்ததேயில்லை'' - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் கூறுகின்றமை போன்று, இந்த அரசின் கைகளில் சிக்கித் தமிழினம் பேரழிவு நாசங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால்,ஜே.வி.பியின் எம்.பியான சந்திரசேகரனோ மலேசியாவுக்குப் போயிருந்துகொண்டு, இலங்கையில் தமிழருக்கு எதிராக இனப்படுகொலை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று நியாயம் பிளக்கின்றார்.

'இனவழிப்பு' என்பது வெறுமனே இனம் சார்ந்த மக்களைக் கொன்றொழிப்பது மட்டுமல்ல. அந்த இனம் தனித்துவமான தேசமாக - தேசியமாக - தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்களை இலக்குவைத்து அழிப்பதையும் கூட அது உள்ளடக்கும்.

பௌத்த - சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறை, இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒன்றுபட்ட ஒரு தேசியக் கட்டமைப்பாக விளங்குவதற்கு அடிப்படையாக உள்ள ஒவ்வொரு ஆதாரத்தையும் இலக்கு வைத்துத் தாக்கி அழித்து வருகின்றது.

மொழி உரிமை, கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, தாயகத் தனித்துவத்தைப் பேணும் நில உரிமை, பொருளாதாரத்தைப் பேணும் உரிமை என்று ஒவ்வொன்றாகப் பறித்து வந்த அடக்குமுறை நடவடிக்கை இன்று தமிழர்களின் வாழ்வியல் உரிமைகளையே கேள்விக்கு உள்ளாக்கி அவர்களைப் பேரவலப்பட வைத்திருக்கின்றது.

இப்படிப் பல்பரிமாண அரச ஒடுக்குமுறையின் விளைவாக இலங்கைத் தீவில் தனித்துவமான தேசிய இனம் என்ற தனது அடையாளத்தைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் அளவுக்குத் தமிழினம் சிதறி, நலிவுற்று, தள்ளாடுகின்றபோது, தன்னைத் தமிழர் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இலங்கையில் இனப்படுகொலையோ அல்லது இனவழிப்போ இடம்பெறவேயில்லை என்று வாதிப்பது வேதனைக்குரியது. பேரினவாதக் கட்சி ஒன்றின் முந்தானையில் தொங்கிக்கொண்டு - ஒட்டிக்கொண்டு - அரசியல் நடத்தும் ஒருவரிடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்க முடியும். இப்படியான கூற்றைத்தான் நாம் செவிமடுக்க முடியும்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுகின்றமையைத் தாங்க முடியாமல் தமிழகம் இன்று கொதித்துக் கொந்தளித்து, கிளர்ச்சியுற்று நிற்கின்றது. தமிழகம் எங்கும் எழுச்சிகள், எதிர்வினைகள் பெருகியுள்ளன.

தமிழகத்தில் அரசியல்வாதிகள் மட்டுமல்லர், சமூகத்தின் சகல அங்கங்களைச் சேர்ந்தவர்களும் இலங்கையில் அவலப்படும் தங்களின் இரத்த உறவுகளுக்காக வீறுகொண்டு நிற்கின்றனர்.

நடிகர்கள், கலைஞர்கள், வர்த்தகர்கள், வசதியுள்ளவர்கள் என்றுமட்டுமல்ல - சிறையில் உள்ள கைதிகள், ஏழைகள், அரவாணிகள், வலது குறைந்தோர் என சமூகத்தின் சகல மட்டங்களைச் சேர்ந்தோரும் - ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் கொதித்தெழுந்து தமது உணர்ச்சிப் பிரவாகத்தை வெளிப்படையாகக் காட்டுகின்ற சூழ்நிலையில், தம்மை இந்திய வம்சாவளிப் பிரஜை என அறிமுகப்படுத்திக் கொண்டே ஈழத் தமிழர்களின் அவல நிலையை மூடி மறைக்கும் விதத்தில் - அவர்கள் இனப்படுகொலை ஆபத்தில் இல்லை என்று சந்திரசேகரன் எம்.பி. கூறுகின்றமை வேதனைக்குரியதே.

புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையே இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அரச கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் வகைதொகையின்றி இடம்பெறும் காணாமல் போதல்கள், கடத்தல்கள், சட்டவிரோதப் படுகொலைகளில் இருந்து - வன்னியில் வல்வளைப்புக்குள் சிக்கியிருக்கும் தமிழர்களுக்கு எதிரான பொருளாதாரத் தடை முதல் அப்பிரதேசங்கள் மீது நடத்தப்படும் கண்மூடித்தனமான யுத்தத் தாக்குதல்கள் வரை - அனைத்துக் கொடூரங்களுமே தமிழினத்துக்கு எதிரான இனவழிப்புச் செயற்பாடுகளின் அங்கங்களே. இதனைப் பேரினவாதிகளுக்கு காவடி தூக்கும் அரசியல்வாதிகள் தமது வாய்ச்சவடால் மூலம் மூடி மறைத்து விட முடியாது.

# குடாநாட்டுச் சந்தைகளில் நேற்று மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி

## மிளகாய், கத்தரிக்காய் ஆகியவற்றுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் நேற்று வீழ்ச்சியடைந்து காணப்பட்டதாகப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் கத்தரிக்காய், மிளகாய் ஆகியவற்றின் விலைகள் தொடர்ந்தும் உச்ச நிலையிலேயே உள்ளதாக அவர்கள் மேலும் கூறினார்கள்.

குடாநாட்டில் முக்கிய சந்தைகளான திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை ஆகியவற்றில் நேற்று மரக்கறிகளின் விலைகளில் கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மரக்கறி வகைகள் நேற்று அதிக அளவில் சந்தைக்கு வந்தமையே வீழ்ச்சி ஏற்பட்டமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கொழும்பிலிருந்து தனியார் வியாபாரிகள் சிலரால் விமானம் மூலம் மரக்கறிகள் கொண்டு வரப்பட்டுக் குடாநாட்டில் உள்ள சில முக்கிய சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. மரக்கறிகளின் விலைகளில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணம் எனப் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

லீக்ஸ், தக்காளிப்பழம், கோவா, புடோலங்காய், கரட், பயிற்றங்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம், வெண்டிக்காய், கீரை, மரவள்ளிக்கிழங்கு, பாகற்காய் ஆகிய மரக்கறிகளின் விலைகளே நேற்றுக் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்து காணப் பட்டன.

எனினும் கத்தரிக்காய், மிளகாய் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் ஏற்படவில்லை. இவை சந்தைகளில் போதியளவு காணப்பட வில்லை. இரண்டும் கிலோ 800 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகளின் நேற்றைய விலை விவரம் வருமாறு:-

*லீக்ஸ்(1 கிலோ)- ரூ220-240 ரூபா.

*தக்காளிப்பழம்(1கிலோ)-ரூ240-280 ரூபா.

*கோவா(1 கிலோ)-80 ரூபா.

*புடோலங்காய்(1கிலோ)- ரூ100-120 ரூபா.

*கரட்(1 கிலோ)-160

*பயிற்றங்காய்(1கிலோ)-120 ரூபா.

*உருளைக்கிழங்கு(1 கிலோ)- 300 ரூபா.

*வெங்காயம்(1 கிலோ)-110 ரூபா.

*வெண்டிக்காய்(1 கிலோ)-160 ரூபா.

*கீரை(1 பிடி)-20 ரூபா. (20-111-224)

# அதிபர் சேவை தரம் 2:II பதவி உயர்வு குறித்து உயர் நீதிமன்றில் இரு வழக்குகள் தாக்கல்

கொழும்பு,டிசெ.24

இலங்கை அதிபர் சேவை தரம் 2:IIபதவி உயர்வு எழுத்துப் பரீட்சையில் உயர்புள்ளி பெற்ற போதிலும் நியமனம் வழங்கப்படவில்லை. எனவே, உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறுகோரி பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் இரண்டு வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 20 ஆசிரியர்களும் மேல்மாகாணத்தைச் சேர்ந்த 50 ஆசிரியர்களும் குழுக்களாக உயர் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வகையில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை 2:II பதவி உயர்வு தொர்டர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட அதிகூடிய புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

எனினும் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை இரண்டிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகளை அடிப்படையாக வைத்து நியமனம் வழங்கப்பட்டிருப்பதால் போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. எனவே, பதவி உயர்வு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கோரி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வழக்கைத் தாக்கல் செய்துள்ள குழுவில் இடம்பெற்றுள்ள ஆசிரியர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில்:

கிரகித்தல், பொது அறிவு, பாடசாலை முகாமைத்துவம் ஆகிய மூன்று பாடங்களுக்கும் தலா 100 புள்ளிகள் வீதம் மொத்தம் 300 புள்ளிகளும் நேர்முகப் பரீட்சைக்கு 150 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன என வர்த்தமானியில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் எழுத்துப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கே பதவி உயர்வு பெறுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. இந்த வகையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் அதிபர் சேவை தரம் 2:IIபதவி உயர்வு நியமனத்தில் எதிர்பாராத திருப்பங் களை ஏற்படுத்தும்-எனக் கூறினார்.

# ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து நான்கு வருடங்கள் பாதிக்கப்பட்ட மணற்காட்டு மக்களுக்கு விமோசனமில்லை

உடுப்பிட்டி,டிசெ.24

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. எனினும் அதனால் பெருமளவு பாதிக்கப்பட்ட மணற்காட்டு மக்களுக்கு இன்னும் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கவில்லை. அத்துடன் அவர்களின் பல்வேறு தேவைகளும் பூர்த்தியாக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலைஅனர்த்தம் நிகழ்ந்த போது மணற்காட்டு மக்களுக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டன.

ஆழிப் பேரலையில் சிக்கி மொத்தம் 77 பேர் உயிரிழந்தனர். 182 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. பல வீடுகள் பெரும் சேதமடைந்தன.

வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கென திட்டமிட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் அவற்றுள் பல வீடுகள் அரைகுறையாகவே உள்ளன.

**இடைத்தங்கல் முகாம்களிலேயே தொடர்ந்தும் வாழ்க்கை**

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இங்கு போதிய வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே வாழ்க்கை நடத்துவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம மக்கள்-பெண்களும்-கடற்றொழிலையே பெருமளவில் நம்பி வாழ்ந்தனர். பெண்கள் கடற்பகுதிக்குச் சென்று தொழில் செய்ய அனுமதிக்கப்படாததால் அவர்களின் குடும்பங்கள் பட்டினியுடனேயே வாழ்க்கையை நடத்த வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து உரிய உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடுகள், மகஜர்கள் சமர்ப்பித்தபோதும் இதுவரை எமக்கு எவ்வித பலனும் ஏற்படவில்லை. எமக்கு இவர்கள் தரும் நிவாரணப் பொருள்கள் போதுமானதாக இல்லை. எனவே எமக்கு நிவாரணங்கள் வேண்டாம்; எம்மைச் சுதந்திரமாகக் கடற்றொழில் செய்வதற்கு அனுமதித்தாலே போதும்- என்று பாதிக்கப்பட்டுள்ளோர் உதயனிடம் தெரிவித்தனர். (202-155)

# அமரர் மகேஸ்வரனின் நினைவாக வயோதிபர்கள், மாணவர்களுக்கு அன்பளிப்பு

வடமராட்சி, டிசெ.24

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தியாகராசா மகேஸ்வரனின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வடமராட்சியில் வயோதிபர்களுக்கு உடுபுடைவைகளும், வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அன்னாரின் நினைவுதினத்தையொட்டி தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதி கோயிலில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமரர் மகேஸ்வரனின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செய்யப்பட்டது. அதன் பின்னர் ஆசிரியர் எஸ்.கைலேஸ்வரன் நினைவுரை நிகழ்த்தினார். அங்கு கலந்து கொண்ட சிலரும் அஞ்சலி உரையாற்றினார்கள். இறுதியில் சந்நிதி கோயில் சுற்றாடல்களில் ஆதரவற்ற நிலையில் வசித்துவரும் சுமார் 60 இற்கும் மேற்பட்ட வயோதிபர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது.

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் இடம்பெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து அங்குள்ள பெரியாழ்வார் ஆச்சிரத்தில் அமரர் மகேஸ்வரனின் உருவப்படத்திற்கு ஆராதனை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் அன்னாரின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார். பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் , வல்லிபுர ஆழ்வார் கோவில் தர்மகர்த்தாசபை செயலாளர் எஸ்.கேசவனானந்தனம், யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய மாணவன் எம்.அருட்செல்வன் ஆகியோர் நினைவுரையாற்றினார்கள்.


இதனைத் தொடர்ந்து வல்லிபுர ஆழ்வார் கோவில் சூழலில் வசித்துவரும் வயோதிபர்களுக்கு உடுபுடைவைகளும், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சற்கோவளம் மெ.மி. பாடசாலை, குடத்தனை அரசினர் பாடசாலை ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 30 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் பெரியாழ்வார் ஆ[illegible] மத்தினால் வழங்கப்பட்டன.(202-236)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 10. | 25.12.2008 வியாழக்கிழமை |
| திதி: | திரயோதசி பி.ப.02.13வரை |
| நட்சத்திரம்: | அனுஷம் [illegible] |
| [illegible] | 07.57 - 09.27 |
| ராகுகாலம்: | 01.57 - 03.27 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது



களமிறங்குவதற்காகக் காத்திருக்கிறார் டானியல் விற்றோரி.

நியூஸிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிந்தது. இதனால் இரு போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் சம புள்ளிகளைப் பெற்றுச் சமநிலை அடைந்தன. இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் 307 ஓட்டங்களையும் நியூஸிலாந்து அணி 371 ஓட்டங்களையும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தன.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்தைவிட 64 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 375 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணியின் வீரர் கிறிஸ்கெயில் 197 ஓட்டங்களைக் குவித்து, இரட்டைச் சதத்தை மயிரிழையில் தவறவிட்டார். 7 சிக்ஸர்கள், 20 பவுண்டரிகள் அடங்கலாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். நியூஸிலாந்து வீரர் படேல் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

317 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 220 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத்தீவுகள் வீரர் கிறிஸ்கெயில் தெரிவானார். (த)

# இரண்டாவது போட்டி சமநிலையில் முடிந்ததால் டெஸ்ட் தொடரையும் இழந்தது இங்கிலாந்து

## 1 - 0 என்ற ரீதியில் இந்தியா வெற்றி



யுவராஜின் அதிரடி ஆட்டம்...

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடந்த இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. இதன்மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இந்திய அணி 1 - 0 என்ற ரீதியில் சுவீகரித்து வெற்றி வாகை சூடியது.

முதலாவது இன்னிங்ஸில் இந்தியா 453 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி 302 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன.

இந்நிலையில் 151 ஓட்டங்களால் முன்னிலை வகித்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது. இடையிடையே காலநிலை சீரின்மையால் போட்டி ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதனால் இந்திய அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் ஐந்தாம் நாளான நேற்று மதியம்தான் முடிவுக்கு வந்தது. இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்திய அணி வீரர் கௌதம் கம்பீர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அருமையான சதம் கடந்தார். மற்றொரு அதிரடி வீரர் யுவராஜ் சிங் வழக்கம்போல தனது விளாசலைத் தொடர்ந்தார். அவர் 93 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 86 ஓட்டங்களைக் குவித்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அவர் மட்டுமன்றி இரண்டாவது இன்னிங்ஸில் ஷேவாக், லக்ஷ்மன் ஆகியோரும் 'ரண் அவுட்' முறையில் வெளியேறிமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு கட்டத்தில் 7 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸை நிறுத்திக்கொண்டது. இந்திய அணி சார்பாக கம்பீர் (97), யுவராஜ் (86) ஆகியோரைத் தவிர ஏனையோர் மிகவும் சொற்ப ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்து வெளியேறினர்.

ஷேவாக் (17), டிராவிட் (0), டெண்டுல்கர் (5), லக்ஷ்மன் (15), டோனி (0), ஆகிய முக்கிய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ரசிகர்களை ஏமாற்றினர்.

வெற்றி பெறுவதற்கு 402 ஓட்டங்கள் தேவை என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 64 ஓட்டங்களை எடுத்திருந்தது. அத்துடன் ஆட்டம் சமநிலைக்கு வந்தது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக கிறிஸ்கெயிலும், தொடர் நாயகனாக இந்திய அணி வீரர் சகீர்கானும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பாகிஸ்தான் - இலங்கை போட்டிக்கு நடுவர்களை அனுப்ப ஐ.சி.சி. ஆலோசனை

## பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்ந்த பிறகே முடிவு

மொஹாலி, டிச. 24

பாகிஸ்தான் - இலங்கை இடையிலான தொடருக்கு நடுவர்களை அனுப்புவதற்கு முன்னர், பாதுகாப்புக் குறித்து பாகிஸ்தானில் ஆய்வு மேற்கொள்ளப்படும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் முதன்மைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பு உள்ளிட்ட பயங்கரவாதச் சம்பவங்களைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தானில் விளையாடுவதை ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தவிர்த்து வருகின்றன.

இதற்கிடையே, மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரத் தாக்குதல் காரணமாக இந்தியாவும் அங்கு தொடரில் விளையாட இருந்ததை ரத்து செய்தது. மத்திய அரசு அதற்கு அனுமதி மறுத்துவிட்டது.

இதையடுத்து, அத்தொடரை சரிக்கட்டுவதற்காக இலங்கை அணியை அழைத்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. இலங்கை கிரிக்கெட்சபையும் அதற்கு ஒத்துக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

3 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரு 20 ஓவர் போட்டியில் விளையாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அத்தொடருக்கு நடுவர்கள் குழுவை அனுப்ப வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளது ஐ.சி.சி.

''பாகிஸ்தானில் நிலவும் பாதுகாப்புக் குறித்து இலங்கை கிரிக்கெட் சபை கவலை கொள்ளாவிட்டாலும், நடுவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவை அனுப்புவதற்கு முன்னர் பாகிஸ்தானில் முறையாக ஆய்வு மேற்கொள்ளப்படும். அதன் பிறகே இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்' என மொஹாலியில் திங்கட்கிழமை லோர்கட் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டி, மீண்டும் அங்கு நடைபெறுவது குறித்தும் அவர் சந்தேகம் தெரிவித்தார்.

# பீற்றர்சனுக்கு, யுவராஜ் பதிலடி

இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் பீற்றர்சன் பயனற்ற ஆட்டக்காரன் என்று யுவராஜ் பதிலடி கொடுத்துள்ளார். மொகாலி டெஸ்ட் போட்டியில் 3ஆவது நாள் ஆட்ட முடிவில் பேட்டி அளித்த இங்கிலாந்து அணித் தலைவர் பீற்றர்சன், யுவராஜ்சிங்கின் பந்து வீச்சை கிண்டல் செய்தார். அவரது பந்து வீச்சு சாதாரணமானது என்று விமர்சித்து இருந்தார்.

இதற்கு பதிலடியாக இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரரான யுவராஜ்சிங் கூறியவை வருமாறு:-

என்னை பயனற்ற பந்துவீச்சாளர் என்று பீற்றர்சன் கூறியிருப்பதைப் பார்த்தேன். நான் அவரை 5 முறை ஆட்டம் இழக்கச் செய்திருக்கிறேன். அப்படி என்றால் அவர் பயனற்ற ஆட்டக்காரர் என்று தானே அர்த்தம். பீற்றர்சன் என்னைத் தூண்டிவிடும் வகையில் பேசியமை எனது திறமையை வெளிப்படுத்த உதவியது. அதேபோல் நான் அவரைத் திட்டியமை அவர் சிறப்பாக ஆட உதவியிருக்கிறது. இருப்பினும் நாகரீகம் இல்லாத பிரச்சினைகளை வெளிப்படையாக விவாதிக்க விரும்பவில்லை.



பீற்றர்சனின் பந்து வீச்சை விட எனது பந்து வீச்சு நன்றாகத் தான் உள்ளது. அவரது பந்து வீச்சு முறை பயனற்றது. அவர் கடினமாக உழைத்தால் நல்ல பந்துவீச்சாளராகலாம். அவருக்கு ஆலோசனை வழங்க நான் தயார். களத்துக்கு வெளியே நான் பீற்றர்சனுக்கு நண்பன். நாங்கள் வெற்றிக்காக செயல்படுவோம்.

- இவ்வாறு யுவராஜ்சிங் கூறினார்.

# ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட்டுக்கு அப்ரிடி, அக்தர், கிப்ஸ் ஏலம்!

2ஆவது ஐ.பி.எல். போட்டி அடுத்த வருடம் ஏப்ரல், மே மாதங்களில் நடக்கவிருக்கிறது. இந்தப் போட்டிக்கான புதிய வீரர்கள் ஏலம் பெப்ரவரி மாதத்தில் நடக்கவிருக்கிறது.

ஏற்கனவே தங்கள் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களை ஏலம் விடலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதோடு தங்களுக்கு விருப்பமான வீரர்களை எடுத்துக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி ஏலம் விடப்படும் 3 வீரர்களின் பெயர் தற்போது தெரிய வந்துள்ளது. பாகிஸ்தான் அதிரடி வீரர் அப்ரிடி ஐதராபாத் அணிக்காக விளையாடினார். அவரது ஆட்டம் மோசமாக இருந்தது. இதனால் அவரை ஏலம்விட அந்த அணி முடிவு செய்துள்ளது. இதேபோல அந்த அணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு வீரரான கிப்ஸும் (தென்ஆப்பிரிக்கா) ஏலம் விடப்படுகிறார்.

ஷாருக்கானின் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில் இடம் பெற்றவர் சொயிப் அக்தர். பாகிஸ்தான் வேகப்பந்து வீரரான அவரை ஏலம்விட அந்த அணி முடிவுசெய்துள்ளது. இலங்கை சுழற்பந்து வீச்சாளர் மெண்டிஸை எடுக்க அந்த அணி முடிவு செய்துள்ளது. இதனால் அக்தர் கழற்றி விடப்படுகிறார். (த)

## ஐ.பி.எல். போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பது சந்தேகம்

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். 20 ஓவர்களைக் கொண்ட போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் இந்திய பிரிமியர் லீக், ஆண்டுதோறும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளை நடத்துகின்றது. 2009ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்கான வீரர்கள் ஏலம் வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது என்றும், அவர்கள் பங்கேற்காவிட்டால் அதுபற்றிக் கவலையில்லை என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தெரிவித்தார்.

# முதல் தர கிரிக்கெட் போட்டியில் ஆடமாட்டேன் - கங்குலி அறிவிப்பு

கொல்கத்தா, டிச. 24

முதல்தர கிரிக்கெட் போட்டியில் இனிமேல் ஆடமாட்டேன் என்று கங்குலி கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி கடந்த மாதம் நாக்பூரில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றார்.

ஓய்வுபெற்ற கங்குலி ரஞ்சிக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் கோவா அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்கால் அணிக்காக களம் இறங்கி ஆடினார்.

அவர் முதல் இன்னிங்ஸில் சேர்த்த 69 ஓட்டங்கள் பெங்கால் அணிக்கு முக்கிய பங்கு வகித்தன. முதல் இன்னிங்ஸ் முன்னிலை மூலம் பெங்கால் அணி 'எலைட் டிவிஷன்' ஆட்டத்துக்கு முன்னேறியது.

இந்த நிலையில் ரஞ்சி ஆட்டத்தில் விளையாடி விட்டுத் தனது சொந்த ஊரான கொல்கத்தாவுக்கு திரும்பிய கங்குலி உள்ளூர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், 'பெங்கால் அணியை எலைட் டிவிசன் ஆட்டத்துக்கு முன்னேற வைத்த பின்னர் முதல்தர போட்டியில் ஆடும் எனது ஆசை முழுமையாக பூர்த்தியாகிவிட்டது.

எந்த நிலையில் இருந்து எனக்கு நெருக்கடி வந்தாலும் நான் இதற்கு மேல் முதல்தர போட்டியில் விளையாட [illegible] தகுதிக்காக தொடர்ந்து [illegible] - என்று தெரிவித்துள்ளார்.

# டோனிக்கு கோயில் கட்ட குடும்பத்தினர் எதிர்ப்பு



டோனிக்கு கோவில் கட்ட ரசிகர்கள் முடிவு செய்து இருப்பதற்கு அவரது குடும்பத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். டோனியின் மைத்துனர் சவுரவ் குப்தா இது தொடர்பாக கூறியவை வருமாறு:-

டோனிக்கு கோவில் கட்டும் முடிவை நாங்கள் யாரும் ஆதரிக்கவில்லை. கோவில் கட்டக்கூடாது. இது ஒரு விளம்பரம் தேடும் முயற்சியாகும். கடவுளுக்கு மட்டும்தான் கோவில் கட்ட வேண்டும். டோனி கடவுளுக்கு பயப்படும் மனிதர்.

மூத்த வீரரான டெண்டுல்கருக்கு டோனியைவிட அதிகமான ரசிகர்கள் உலகம் முழுவதும் உள்ளனர். ஆனால் அவர்கள் யாருமே டெண்டுல்கருக்கு கோவில் கட்டவில்லை. டோனியே தெண்டுல்கரின் ரசிகர் ஆவார்.

- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் மரக்கறி விதைகள் தட்டுப்பாடு; உற்பத்தியாளர் சிரமம்

கரவெட்டி,டிசெ.24

வடமராட்சிப் பிரதேசத்தில் மரக்கறி விதைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் உற்பத்தியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது மரக்கறிகள் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டுவரும் நிலையில் அவற்றை உற்பத்தி செய்ய விதைகள் இன்மையும் விலை உயர்வுக்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது காலங்கடந்த விதைகளே நாற்றுமேடைகளில் விதைக்கப்படுவதாகவும் அவையும் தாராளமாக இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தை உரிய அதிகாரிகள கவனத்தில் எடுத்து உற்பத்தியாளர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-70)

# நடைபாதை வியாபாரிகள் சிரமத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.24

திடீர் திடீரென மழை பெய்வதால் யாழ். நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் இவ்வாறு திடீர் திடீரென பெய்யும் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரில் தற்போது வியாபார நட்வடிக்கைகள் களைகட்டி காணப்படுகின்றன.

மக்களின் சன நெரிசலும் நகரில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ். வீதி போன்றவற்றில் போக்குவரத்து நெரிசல் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. (203-224)



கலாசார திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த 'கலாபூஷணம்' விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் இடம்பெற்றபோது கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் E.M.அபயரத்தின, மூத்த எழுத்தாளர் பொ.சண்முகநாதனுக்கு (சண் அங்கிள்) விருது வழங்கிக் கௌரவித்தார்.

கௌரவம் பெற்ற எழுத்தாளருக்கு கதிர்காமத் தொண்டர் சபைத் தலைவரும் சமாதான நீதிவானுமாகிய சி.அருளானந்தன் பொன்னாடை போர்த்துவதையும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் Y.L.M. நவவி, ஜனாதிபதியின் ஊடக ஆலோசகர் A.H.M.அஸ்வர் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நெடுந்தீவுப் பகுதியில் வீடுகள் புனரமைப்பு

வண்ணார்பண்ணை,டிசெ.24

நெடுந்தீவுப் பகுதியில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் 42 வீடுகளை 42 லட்சம் ரூபா செலவில் புனரமைத்து வருகிறது.

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தினூடாக மேற்படி வேலைத்திட்டத்தை மேற்கொண்டிருக்கும் நிறுவனம் இதுவரை 20 வீடுகளின் வேலைகளைப் பூர்த்திசெய்திருப்பதாகவும் ஏனைய 22 வீடுகளின் புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேறொரு நிறுவனத்தால் தொடங்கப்பட்டுக் கைவிட்ட நிலையில் இருந்த 42 வீடுகளையே வீட்டுக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் செலவு செய்து புனரமைப்பு வேலைகளைச் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-160)

# திருநெல்வேலிச் சந்தையின் இரண்டாம் கட்ட வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

நல்லூர்,டிசெ.24

திருநெல்வேலி பொதுச்சந்தையின் இரண்டாவது கட்ட வேலைகள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

புதிய கட்டடத்தின் கூரைகளில் விழும் மழைநீர் ஒரு வழியினூடாகத்தான் கீழே விழுகின்றது.

அப்படி விழும் மழைநீரைத் தலங்காவல் பிள்ளையார் வீதியில் உள்ள வாய்க்காலில் சேர்க்கப்படும்.

இதனால் சந்தைக்குள் நீர் தேங்கக் கூடிய நிலை தவிர்க்கப்படும்.

தலங்காவல் பிள்ளையார் வீதி வாய்க்காலூடாக நீர் அரசடி வீதி சந்தியில் உள்ள மதகு வழியாகப் பரவைக்குளத்தைச் சென்றடையும் எனவும் செயலாளர் குறிப்பிட்டார்.

கட்டடப் பணிகள் துரிதமாகப் பூர்த்தி செய்யப்படும் எனவும் கூறப்படுகின்றது. (203-111)

# மானிப்பாய் பொதுச்சந்தையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

ஆனைக்கோட்டை,டிசெ.24

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட மானிப்பாய் பொதுச்சந்தையானது நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடப்பதாகவும் அதனைப் புனரமைத்துத் தருமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

அண்மைக் காலங்களில் வெவ்வேறு இடங்களிலுள்ள பொதுச்சந்தைகள் பலவும் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றுக் காணப்படுகின்றன.

மானிப்பாய் பொதுச்சந்தை மட்டும் பழைமையானதாக, எதுவித முன்னேற்றகரமான வசதிகளின்றி பழைய கட்டடத்திலேயே தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து வசதிகள் மிகுந்த பெரிய கட்டடத் தொகுதியை அமைத்து, அதில் மேற்படி சந்தையை இயங்கவைக்கவேண்டுமென மக்கள் பலரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது எந்தக் காலத்தில் சாத்தியப்படுமென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (203-20)

# சவுக்கு மரங்களை வெட்டியோர் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,டிசெ.24

கோப்பாய் இராஜ வீதிப் பகுதியில் நிற்கும் சவுக்கு மரங்கள் வெட்டியோர் பொது மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த வீதியோரத்தில் நின்ற சவுக்கு மரங்களை சிலர் வியாபார நோக்கத்திற்காக வெட்டி எடுத்துச் செல்வதை மக்கள் தெரிந்து கொண்டனர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் இந்த சவுக்கு மரங்களைச் சிலர் வெட்டுவதற்கு முயற்சித்த சமயம் அங்கு திரண்ட மக்கள் அவர்களை விரட்டியுள்ளனர்.

இதனால் அவர்களில் சிலர் கத்திகளையும் போட்டு விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

அத்துடன் இப்பகுதியில் நிற்கும் அநேகமான சவுக்கு மரங்கள் வெட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. (203-224)

# ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.24

ஆனைக்கோட்டை புனித அடைக்கல மாதா ஆலயப் பங்கின் ஒளிவிழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆலய கலையரங்கில் நடைபெறுமென ஆலயப் பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

மேற்படி ஒளிவிழாவானது அமைதியான முறையில் நடைபெறுமெனவும், களியாட்டங்கள் தவிர்க்கப்பட்டு, இறை விழுமியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி இளைஞர் மன்றம் வழங்கும் அ.சூரியனின் நெறியாள்கையில் உருவான 'ஆன்ம ஒளி' எனும் இறையியல் சார்ந்த வில்லிசை மற்றும் கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (203-20)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# திறன் வளர்ப்புப் பயிற்சி

வடமராட்சி,டிசெ.24

''சொன்ட்'' அரசசார்பற்ற நிறுவனம் நடத்திய கிராம மட்ட அமைப்புகளுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி கடந்த மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி வல்வெட்டித்துறைச் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

மேற்படி பயிற்சியில் 23 பயனாளிகள் பங்குபற்றினர். இப்பயிற்சியில் ஆவணப்படுத்தல், சமூக அணிதிரட்டல் என்றால் என்ன?, சமூக அணிதிரட்டாளரின் திறன், சமூக அணி திரட்டாளர் செய்யக் கூடாதவை, சமூக அணிதிரட்டாளரின் நோக்கம், நீர்ச் சிக்கனம் போன்ற விடயங்கள் பற்றி வகுப்புகள் நடைபெற்றன. (201)

# ஆதன வரிச் சலுகை வழங்கப்படுகிறது

ஆனைக்கோட்டை,டிசெ.24

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து ஆதன வரி செலுத்துவோர் 2009ஆம் ஆண்டுக்கான ஆதன வரியை நேர காலத்தில் செலுத்தும் பட்சத்தில், அவர்களுக்குக் குறிப்பிட்ட வீதத்தில் கழிவு வழங்கப்படுமென பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய ஆதன வரியை முன்கூட்டியே அதாவது ஜனவரி 31, ஏப்ரல் 30, ஜூலை 31, ஒக்ரோபர் 31 ஆகிய திகதிகளுக்கு முன்பாகச் செலுத்துவோருக்கு ஐந்த வீதக் கழிவு வழங்கப்படுமென அறிவித்துள்ளார்.

எனினும் ஆதன வரியை உரிய வருடத்தில் செலுத்தத் தவறுவோருக்கு பத்து வீதத் தண்டப்பணம் அறவிடப்படுமெனவும் அறிவித்துள்ளார்.

எனவே மக்கள் தமது ஆதன வரியை உரிய காலத்தில் செலுத்தி பிரதேச சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் செலுத்தமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-20)

# கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.24

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தவுள்ளது.

இப்பரீட்சை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உட்பட 24 மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம், மானிப்பாய், பருத்தித்துறை, நெடுந்தீவு ஆகிய நகரங்களில் நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் மறைப் பாடசாலைகள் ஊடாக மட்டுமே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

மறைப் பாடசாலைகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் பெற்று எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 19.12.2008 அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)




குடாநாட்டின் சூழலைப் பாதுகாப்பதற்கெனப் பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு 'நிழல்' அமைப்பு மரக்கன்றுகளை வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக அராலிப் பிரதேச பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.அராலி இந்துக் கல்லூரிக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்ட போது 'நிழல்' அமைப்பின் செயலாளர் கு.சோமசுந்தரத்துக்கு மாணவர் ஒருவர் மாலை அணிவித்து மதிப்பளிப்பதைப் படத்தில் காணலாம். அமைப்பின் நிர்வாகிகளும் படத்தில் காணப்படுகின்றனர்.

# ஒரே நேரத்தில் நான்கு நிவாரணங்களுக்குரிய பொருள் விநியோகம்; சங்கங்களில் நெருக்கடி

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நான்கு நிவாரணப் பொருள்களும் ஒரே சமயத்தில் விநியோகிக்கப்பட்டு வருவதால் சங்கங்களில் பெரும் நெருக்கடி நிலவுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இடம்பெயர்ந்தோர், நலிவுற்றோர், [illegible] அனர்த்தம் போன்றவற்றிற்கான நிவாரணங்கள் ஒரே சமயத்தில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மறுபுறத்தில் பங்கீட்டு அட்டைக்குச் சீனி, உருளைக்கிழங்கு மற்றும் அத்தியாவசியம் பொருள்களும் மற்றும் நத்தார், புதுவருட பொருள்களும் விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் நிவாரண விநியோகங்களை குறுகிய நாள்களுக்குள் முடிக்கவேண்டும் என்று யாழ்.செயலகம் அறிவித்துள்ளதாகவும் கவலை கூறப்படுகின்றது. (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

வரைவுள்ள யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம், எதிர்வரும் 27.12.2008ஆம் திகதி சனிக்கிழமை, முற்பகல் 10 மணிக்கு கீழ்வரும் அட்டவணையிலுள்ள விவரப்படி நடைபெறும் என்பதையும் ஒவ்வொரு பிரதேச மன்று அங்கத்தவர்களும் தனிப்பட்ட ரீதியில் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

| பிரதேச மன்றின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| 01. நல்லூர் | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் |
| 02. யாழ்ப்பாணம் | கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். |
| 03. கோப்பாய் (வலி.கிழக்கு) கரவெட்டி (வடமராட்சி தென் மேற்கு) பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | கந்தசாமி கோயிலடி, சனசமூக நிலையம், மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். |
| 04. உடுவில் (வலிகாமம் தெற்கு) | யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மானிப்பாய் வீதி, மருதனார்மடம், சுன்னாகம். |
| 05. சங்கானை (வலிகாமம் மேற்கு) காரைநகர் | யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சித்தன்கேணிக் கிளை நிலையம், சித்தன்கேணி. |
| 06. சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு) | பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு. |
| 07. தெல்லிப்பழை (வலிகாமம் வடக்கு) | மகாஜன சபை மண்டபம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. |
| 08. சாவகச்சேரி (தென்மராட்சி) | சாவகச்சேரி பிரதேச செயலகம், கண்டி வீதி, சாவகச்சேரி. |

**குறிப்பு:**

கரவெட்டி (வடமராட்சி தென்மேற்கு), பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு), காரைநகர் ஆகிய பிரதேச மன்றுகளில் அங்கத்தவர்கள் குறைவாக இருப்பதால் உபவிதிக்கு அமைவாகவும் நெறியாளர்குழுத் தீர்மானத்திற்கு அமைவாகவும் கரவெட்டி, பருத்தித்துறைப் பிரதேச மன்றுகள் கோப்பாய்ப் பிரதேச மன்றுடனும் காரைநகர், சங்கானை பிரதேச மன்றுடனும் இணைக்கப்பட்டுள்ளது.

தங்களது சங்கத்தின் நிர்வாகத்தில் ஒவ்வொரு உறுப்பினர்களும் பங்குபற்றுமுகமாக இக்கிளைக்குழுத் தெரிவில் பங்குபற்றி தங்கள் கிளைக்குழுவைத் தெரிவு செய்து, தங்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

24.12.2008 (சி/556146) **செயலாளர்.**

# 60ஆவது அகவை நிறைவு நல்வாழ்த்தும் சேவை நயப்புரையும்



இன்று தமது 60ஆவது அகவை காணும்
எமது பெருமதிப்புக்கும் அன்புக்குமுரிய
ஐயா அவர்கள் அகவை நூறு நிறைவும்
கண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

## திரு. அம்பலவாணர் நாகராசா

(மின் அத்தியட்சகர்-
இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்)
(சுன்னாகம் பணிமனை)

அவர் கடமையுணர்வும், துணிச்சலும், திறமையும்,
நேர்மையும் ஒருங்கே சேர்ந்த கட்டுக்கோப்பாளன்
"நிஷா" வந்து நம் மக்களை
நிர்க்கதியாக்கிய போது
சீர்குலைந்த மின்சார இணைப்புக்களை
துரித கதியில் சீராக்குவதற்கு
அர்ப்பணிப்போடும் துரித கதியிலும்
சீரமைத்து வழங்குவதற்கு அயராது
உழைத்து மக்களின்
நல் அபிமானம் பெற்றவர்.

ஐயா அவர்கள் மேன்மேலும்
சேவையில் நீடித்து மக்கள் பணி
ஆற்றுவதோடு, எமக்கும்
வழிகாட்டியாகி இருந்து
சேவையாற்ற எல்லாம் வல்ல
இறைவன் அருள்பாலிக்க
வேண்டுவதோடு, அவரின்
மனைவி, பிள்ளைகளும் அவரின்
நல்மனம்போல பெருமதிப்புப்
பெற்று வாழவேண்டும் என்றும்
நெஞ்சார வாழ்த்துகின்றோம்.
அன்புடன் வாழ்த்தும்:
**ஊழியர்கள்,** சுன்னாகம் பணிமனை,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.
(80966)

# சாவகச்சேரி நகர்
## புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்
## 14 ஆவது ஆண்டு நிறைவு விழா

### சிறப்பு மலர் வெளியீடும் மழலைகளின் கலைநிகழ்வும்

இடம்: தென்மராட்சிக் கலை மன்ற கலாசார மண்டபம்,
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.
காலம்: 2008.12.28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.30 மணி
தலைவர்: திரு.வை.இராசரத்தினம் அவர்கள்
(நிலையத் தலைவர்)
பிரதம விருந்தினர்: உயர்திரு. க.கணேஷ் அவர்கள்
(அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், கலாரசிகப் பெருமக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஸ்தாபகர்,**
**புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய நிர்வாகசபை,**
**மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்.**
(சி/556213)

### கற்கள் சிதறியுள்ளன; போக்குவரத்துச் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.24

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்குச் செல்லும் வீதியோரத்தில் குவிக்கப்பட்ட கற்கள் சிதறி கிடப்பதால் மக்கள் போக்குவரத்து செய்வதற்கு சிரமப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வீதியை புனரமைப்பதற்கென கடந்த ஒரு மாதகாலத்திற்கு முன்னர் குவிக்கப்பட்ட இந்தக்கற்குவியல் தற்போது வீதிகளில் சிதறிக் கிடக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.

(203-224)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி ஈஸ்வரி சிவகுமாரன்

பிறப்பு 05.02.1954 இறப்பு 24.11.2008

பாசத்தால் கட்டியாண்டு பண்புடனே வளர்த்தெடுத்து
பாரகத்தே நாம் சிறக்க பல நலன்களை காட்டிவிட்டு
அன்புடன் கோயிலதாய் எம் நெஞ்சில் கொண்டவளே!
மாசுபடா உங்கள் நினைவுகளுடன் எங்கள்
மனதில் நிலைத்து நிற்பீர்கள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர்: குகமூர்த்தி சிவகுமாரன்,
மகன்: சிவகுமாரன் அஜந்தன்,
மருமகளும், சகோதரர்களும்,
சகோதரிகளும்.

நாவலடி கோயில் லேன்,
வட்டுக்கோட்டை மேற்கு,
வட்டுக்கோட்டை. (81102)

# பத்தாம் ஆண்டு நினைவு

## அமரர் நாகமுத்து சின்னத்துரை J.P

[முன்னாள் உப தலைவர்
உடுவில் கி.ச.]



தோற்றம்
28*02*1927

மறைவு
24*12*1998

பத்து ஆண்டுகள் சென்றதையா மறவில்லை உம் திருவதனம்
தேடிநித்தம் ஏங்குகின்றோம் காணவில்லை உம் திருவுருவம்
கூடியிருந்து அரவணைத்து இன்று எம்மை விட்டுச் சென்றதேனோ?

பிரிவால் துயருறும்:
பாக்கியநாதன் (மருமகன்), பவளமலர் (மகள்),
பேரப்பிள்ளைகள்:
பிரியா, நீபா, சிந்து, சரண்யா.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம்,
உடுவில். (81095)

## திருவாசகம் முற்றோதல்

காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயிலில் (ஈழத்துச்சிதம்பரம்) நாளை வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் திருவாசகம், திருக்கோவையார் முற்றோதல் இடம்பெறவுள்ளது. (201)

## தவறிவிட்டது

ஊரெழு மேற்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய ஸ்ரீவரதன் விஜீதரன் என்பவரது தே.அ.அ. (910242890V), விசேட அ.அ. (0903044061) என்பன 10.12.2008 அன்று இணுவிலுக்கும், சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் (81105)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975, உத்தரட்டாதி நட்சத்திரம், கிரகபாவம் 61 உடைய ஆசிரியை மணமகளுக்கு பெற்றோர் உத்தியோக மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
[illegible] உதயன்,
விளம்பர இல. 3163 (81096)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
02.01.1937



உதிர்வு
23.11.2008

## திருமதி மார்க்கண்டு பராசக்தி

கடந்த 23.11.2008 அன்று அமரத்துவமடைந்த எமது குலவிளக்கின் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச்செய்தி வெளியிட்டோருக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், அனுதாபத் தந்தி அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (24.12.2008) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இராமாவில்,
மீசாலை வடக்கு, கொடிகாமம். (81092) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பார்வையற்றவர்களுக்கு ஒளியாக

பண்டைக்கால கிரேக்க நாட்டில் 'ஸ்பார்ட்டா' என்ற நகரத்தில் பார்வையற்றவர்களை மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிக் கொன்றிருக்கின்றனர். ஏதென்ஸ் நகரில் பார்வையற்ற குழந்தைகளைக் கூடைகளில் வைத்து ஆற்றில் விட்டுவிடுவார்களாம், பிரான்ஸில், பார்வையற்றவர்களைப் பன்றிகளோடு மோதவிட்டு வேடிக்கைப் பார்ப்பார்களாம். இதற்கெல்லாம் முக்கிய காரணமாக அமைந்தது, அப்போதெல்லாம் பார்வையற்றவர்களிடம் கல்விஅறிவு இல்லாமைதான்.

ஊனக்கண் கொண்டு திக்கற்றவர்களாய்ப் பார்வையற்றவர்கள் தடுமாறிக் கொண்டிருந்தபோது, 'பிரெய்ல்' என்ற முறையைக் கண்டுபிடித்து, பார்வையற்றவர்களின் ஞானக்கண்ணைத் திறந்து வைத்தார் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயி பிரெய்ல்.

கண்பார்வையற்றவர்களின் கண்ணீரைத் துடைக்க வந்த ஓர் அரிய மனிதர் லூயி பிரெய்ல். ஒரு நாள் தன் தந்தை வேலை செய்யும் இடத்தில் விளையாடிக் கொண்டிருந்த பொழுது, கவனக்குறைவாகச் செருப்புத் தைக்கும் ஊசியால் ஒரு கண்ணைக் குத்திவிட்டார். அது 'செப்டிக்' ஆகி இரு கண்களுமே பார்வையை இழந்தன. அப்போது நடைமுறையில் இருந்த 'லைன்டைப்' என்ற முறை மூலம் கல்வி பயின்றார். அது அவ்வளவாக அவருக்குச் சரிப்பட்டு வரவில்லை. வேறு ஒரு நல்ல முறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அந்த இளவயதிலேயே தீர்மானித்து விட்டார்.

இராணுவத்தில் பணியாற்றிய கப்டன் ஒருவரைச் சந்தித்து இராணுவ இரகசியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த 12 புள்ளிகளைப் பற்றிக் கேட்டறிந்தார்.




அப்பொழுது லூயி பிரெய்லுக்கு பன்னிரண்டு வயதுதான்.

அந்தக் கப்டனுடைய அனுமதியுடன் அந்த 12 புள்ளிகளை இன்னும் குறைத்து ஆறு புள்ளிகள் போதுமென்று ஒரு புதிய முறையைக் கண்டார். இந்த ஆறு புள்ளிகளைக் கொண்டே 63 வகை எழுத்துக்களையும் அடக்கிக் காட்டினார். சற்றுக் கடினமான ஒரு காகிதத்தில் ஊசியால் குத்தினால், குத்தப்பட்ட இடத்தின் பின்புறத்தில் சிறிய மேடு ஒன்று உருவாகும். இந்த மேடுகளைக் கொண்டுதான் பிரெய்ல் எழுத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தக் காகிதப்புள்ளி மேடுகளை விரல்களால் தடவி எழுத்துக்களை அறியலாம். இந்த முறைக்குத்தான் பிரெய்ல் முறை என்று பெயர். அத்தனை சிறு வயதில் அவர் அதைக்கண்டு பிடித்தும்கூட, அவர் இறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவருடைய சொந்த நாட்டில் பிரெய்ல் முறை அறிமுகமாகியது. அதன்பிறகு அந்தமுறை உலகெங்கும் பரவியது. பிரெய்ல் முறையைப் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கற்கலாம். கைவிரல்கள் சற்று மிருதுவாய் இருந்தால் போதும். ஓரளவு கல்வியறிவு உடையவர்கள் இதை ஒரே மாதத்திலும் கற்கலாம். நிமிடத்துக்கு 145 வார்த்தைகளை பிரெய்ல் முறையில் படிக்க முடியுமாம். ********

தாசன், பாஷையூர்.

# தாய்மை



உன்
உதிரத்தையே
எனக்காகக்
கருவாக்கினாய்
என்
உயிர்ப்பிலும்
உணர்விலும்
உன் தாய்மையை
எதாக்கினாய்
பிரபஞ்சமே.... நீயாக....

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

# நான் அடிமையில்லை

முடிச்சுகள்
முடிவாக வில்லை
முடிச்சுகளோ இன்னும்
அவிழவில்லை
ஆனால்!
விவாகரத்து என்று
வந்துவிட்டால்
விவாதங்கள் தேவையில்லை
இனியும் - நான்
உன்னைப் பின் தொடர.....
நீ ஒன்றும் எனக்கு
நடை வண்டியில்லை

சா.ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

# ஆல்பாட்ரோஸ் பறவை



கடலில் கப்பலைக் கண்டுவிட்டால் குஷி பிறக்கின்றதாம் ஒரு பறவைக்கு. 'ஆல்பாட்ரோஸ்' என்பது அதன் பெயர்.

மீன்களும், கப்பலில் பயணம் செய்கின்றவர்கள் எறிகின்ற உணவுப் பொருள்களும் இதற்குப் பிடித்தமானவை. அதற்காகவே இவை கப்பலைக் கண்டுவிட்டால் குஷியாக இருக்கின்றன.

கப்பலைக் கண்டுவிட்டால் போதும் உடனே அங்கே போய் விடும். காற்றடிக்கும் வேகம், திசை என்பவற்றுக்கு ஏற்ப தனது பறக்கும் சக்தியை இதனால் கூட்டிக்குறைக்க முடியும்.

எப்போதும் பறந்து கொண்டே இருக்கும். சும்மா சோம்பிப்போய் உட்காருவதை ஒரு நிமிடம் கூட நம்மால் பார்க்க முடியாது. அத்தனை வேகம் இந்தப் பறவைக்கு.

கரையில் இருந்து எவ்வளவு தூரம் சென்றாலும் இதன் இருப்பிடத் திசை தெரியாமல் திண்டாடியதில்லை. தீவுகளிலும் பெரிய பாறைகளிலும் கூடுகட்டி வாழும். இதன் இறக்கை 15 அடிக்கு மேல் நீளம் கொண்டது. இறக்கையை ஆட்டாமல் அசைக்காமல் சிறகுகளை விரித்துப் பறக்கும் போது ஒரு குட்டி விமானம் வட்டமிடுவது போல் இருக்கும்.

'ஆல்பாட்ரோஸ்' பறவையில் 16 இனங்கள் உள்ளன. 45 ஆண்டுகள் வரை உயிர்வாழும். ஓர் ஆண்டுக்கு ஒரேயொரு முட்டை மட்டுமே இடும். முட்டை இடுவதற்குப் பாறைகளுக்கு நடுவே உள்ள திறந்த வெளியை தேர்ந்தெடுத்து, அங்கே முட்டையை இடும். இந்தப் பறவை மிகமிக மெதுவாகவே தனது இனத்தை விருத்திசெய்யும்.

அதிஷ்டவசமாக இந்தப்பறவைகளை உணவுக்காக யாரும் வேட்டையாடுவதில்லை. இதனால் இன்னமும் இந்த இனம் அழியாமல் இருக்கிறது. மனிதன் மட்டும் இதனை வேட்டையாடப் பழகியிருந்தால் இந்தப்பறவை இனமே கூண்டோடு அழிந்து போயிருக்கும். கப்பலைச் சுற்றிச்சுற்றிப் பறந்துவரும் இந்தப் பறவையைத் துன்புறுத்தினாலோ கொன்றாலோ தங்களின் கப்பலுக்குப் பெரிய ஆபத்துவரும் என்ற நம்பிக்கை மாலுமிகளிடமும் கப்பல் பயணிகளிடமும் இருந்தது. இந்த நம்பிக்கை ஒன்றாலே இந்தப் பறவை உயிரினம் இன்றளவும் பூமியில் வாழ்கிறது.

ரவீதாஸ்,
யாழ்ப்பாணம்.





# மூடிவிட்டேன்!



எந்தன்
இதய இல்லத்தின
ஜன்னல்
கதவுகளை
மெல்லத் திறந்திருந்தேன்!
தென்றலாய்
நீ வருவாயென.....
"நிஷா"வாக
வந்ததினால்
இழுத்து மூடிவிட்டேன்
காதலையும் சேர்த்து

எஸ்.மதி

# தாடிகளுக்கும் ஒரு கதையுண்டு



தாடிகளும் மீசைகளும் காலத்துக்குக்காலம் மாறுவதுண்டு.

தமிழ் சினிமாப் படங்கள் பிரபல்யமான ஆரம்ப காலத்தில் பி.யு.சின்னப்பா என்ற நடிகர் அரும்பு மீசையுடன் 'தயாழன்' என்ற படத்தில் நடித்து புகழ் பெற்றார். எனவே அந்தக் காலத்து தமிழ் இளைஞர்கள் 'தயாழன் மீசை' வைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

தியாகராஜ பாகவதர் பின் கழுத்துவரை தமது சுருள் தலைமயிரை வளர்த்து வைத்துக்கொண்டார். அதைப் பார்த்த இளைஞர்கள் "பாகவதர் கட்" வைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். பாகவதர் மீசை வைத்துக்கொண்டு நடித்திருப்பது குறைவு.

ஆதிகால மனிதர்கள் மீசை, தாடிகளுடனேயே வாழ்ந்துள்ளார்கள். தாடிவழிக்கும் ஆயுதங்களை யார் கண்டுபிடித்தார்கள் என்று தெரியவில்லை. அவ்வாயுதங்கள் வந்த பிறகே மனிதன் தன் காட்டுமிராண்டித் தோற்றத்தை மாற்றிக்கொள்ள விதவிதமான தாடிகளையும், மீசைகளையும், தலைமுடி அலங்காரங்களையும் வைத்துக்கொள்ளத் தொடங்கினான்.

மேற்கு நாடுகளில் தாடி, மீசைகளை எவ்வாறு பிரமுகர்கள் வைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள் என்பதற்குக் கதைகள் உண்டு. ஒவ்வொரு தாடிக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. பிறெமிஷ் ஓவியர் அந்தோனிவான் டைக் என்பவர் தாம் வரைந்த ஆண்களின் படங்கள் எல்லாவற்றிலுமே ஒருசிறு கட்டையான தாடியைத் தீட்டியிருப்பார். அதனால் அதைப்போன்ற தாடியை வைத்துக்கொள்ளத் தொடங்கிய அனைவரும் 'டைக்' தாடி என்று அதை அழைத்துக்கொண்டார்கள்.

'கோட்டீ' (ஆட்டுத்தாடி) என்பது தாடையில் வைத்துக்கொள்ளும் ஒரு சிறு தாடியாகும். இது ஆட்டின் தாடியைப் போல காணப்படுவதால் அவ்வாறு அழைக்கப்படுகின்றது. கீழ் உதட்டின் கீழ் ஒரு குஞ்சம் போல வைத்துக்கொள்ளப்படும் தாடிக்கு "இம்பீரியல்" (Imperial) ஏகாதிபத்திய தாடி - என்று பெயர் - காரணம் என்னவென்றால், பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் இவ்வாறான தாடியை வைத்துக்கொள்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருவர் காதோரமாகக் கன்னங்களில் தாடிவளர்த்திருந்தால் அவர் 'பேர்ன்சைட்ஸ்" (Burn sides) வைத்திருக்கிறார் என்று கூறப்படும். இதைச் சைட்பேர்ன்ஸ் (Side burns) என்றும் கூறுவார்கள்.

அமெரிக்க அதிபர் ஏபிரிஹாம் லிங்கன் தாடி வைத்துக் கொண்டமைக்கு ஒருசிறுமிதான் காரணம். நீங்கள் தாடி வைத்துக்கொண்டால் அழகாய் இருப்பீர்கள் என்று அவள் கடிதம் எழுதியிருந்தாள். அதைத் தொடர்ந்து அவர் தாடி வளர்க்க ஆரம்பித்தாராம். ★★★

ரங்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரியின் நடன ஆசிரியை
திருமதி பிறேமநளினி செல்வவிக்கினேஸ்வரராசா அவர்களின்
அன்பு மாமி திருமதி சிவசித்திரபூபதி இராசரத்தினம்
அவர்களின் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/ இணுவில் இந்துக் கல்லூரி.**

(சி/556217)


## யாழ்.பிரதேச செயலர் பிரிவில் சேதங்கள் மதிப்பீடு

நல்லூர், டிசெ.24

'நிஷா' அனர்த்தங்கள் குறித்த சேதமதிப்பீடுகளை யாழ்.பிரதேச செயலகம் தனது பிரிவில் மேற்கொண்டுள்ளது.

இது குறித்த மதிப்பீடு யாழ்.பிரதேச செயலகத் திட்ட உதவியாளர், சமூக சேவைகள் உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள் கொண்ட குழு மதிப்பீடு செய்துவருகிறது.

(203-111)


## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்
## அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபையின் இனங்காணப்பட்ட வீதிகள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவுள்ளதால், வீதிகளின் பட்டியலை பார்வையிட்டு, இவ்வீதிகளுக்கு சொந்தம் பாராட்டக்கூடியவர்கள் அல்லது வீதிகளின் பெயர்களுக்கு ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் எவராவது இருப்பின் 24.12.2008 ஆம் திகதியில் இருந்து ஏழு (07) நாள்களுக்குள் காரைநகர் பிரதேச சபை செயலாளருக்குத் தெரிவிக்கலாமென இத்தால் பகிரங்கமாக அறிவிக்கின்றேன்.

காரைநகர் பிரதேசசபை,
காரைநகர்.

**இரா.லோகநாதன்,**
செயலாளர்.

(சி/556216)



# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2008 80%OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office, 3 Months, 1500/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing, 3 Months, ~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing, 4 Months, ~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10000~~ 2000/= | Diploma in Auto CAD, 3 Months, ~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package, 3 Months, ~~10750~~ 2150/= | Diploma in Computer Science, 4 Months, ~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science, 3 Months, ~~13000~~ 2600/= |

### 50% Off Advance Courses

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |
| Dip. in. Networking | 5000 |

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புகள் நடாத்தப்படும்
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.
January 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

| யாழ்நகரில் ஆரம்பம் | நெல்லியடியில் ஆரம்பம் |
|---|---|
| Batch I: 27/12/2008 -10AM | Batch I: 25/12/2008 -09AM |
| Batch II: 28/12/2008 -10AM | Batch II: 27/12/2008 -10AM |
| Batch III: 29/12/2008 -11AM | Batch III: 28/12/2008 -10AM |
| Batch IV: 30/12/2008 -09AM | Batch IV: 30/12/2008 -09AM |



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 . 09 . 1939



உதிர்வு 05 . 01 . 2008

### திருமதி சிவலிங்கம் இராசேஸ்வரி

திதி: துவாதசி (24.12.2008)

அன்பான அம்மா உயிர் தந்து உலகை விட்டு
உயிர் நீத்து இறைவனடி சேர்ந்து விட்டீர்கள்
உங்களைப் போன்ற அன்பான இனிய அன்னையை
உலகத்தில் கண்டதில்லை
எம்மைப் போல ஏங்கும் மக்கள்
எங்கும் உண்டு வையகத்தில்

உங்கள் கருவில் மீண்டும் மீண்டும் புதிதாய்ப் பிறந்து
உங்கள் மடியில் தவழ்ந்து அரவணைப்பில் வாழ
பிறவிகள் பல வேண்டும் என இறைவனை வேண்டும்
உங்கள் உதிரத்தின் உறவுகள்.

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

'சிவசோதி பவனம்',
வதிரி வீதி,
உடுப்பிட்டி.

அன்பான கணவர்,
மகள்மார், மருமகன்மார்,
பேரன்மார்.

(சி/556214)



# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

**தோற்றம்: 13.06.1948** **மறைவு: 24.11.2008**



கடந்த 24.11.2008 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது
அன்புத் தெய்வம்

## அமரர் அப்பாக்குட்டி மகாலிங்கம் (தேவன்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (24.12.2008) புதன்கிழமை
நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில்
நடைபெறும். அத்தருணம் தாங்கள்
குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை
தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
077 6100264, 0779234946.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் குரல் அலைகள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.சமூக செயற்பாட்டு மையமும் சிறுவர் கழகங்களும் இணைந்து நடத்தும் 'சிறுவர் குரல் அலைகள்' நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.3C மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வு யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் செல்வி மகாலிங்கம் யசோதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.யுனிசெவ் பிரதிநிதி மகினொடா ஆகியோர் கலந்துகொள்வர். (201)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

குருநகர்,டிசெ.24

பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் சென்.அன்ரனிஸ் கணனி அறிவுசார் கல்வியகத்தின் மூன்றாவது வருட சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பயிற்சியகத்தின் இயக்குநர் சி.யோ.கொன்விக்ரர் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் எம்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், கலாநிதி ரி.கலாமணி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (203-51)

## யாழ்.நகரில் உள்ள நான்கு நலன்புரி நிலையங்களில் 74 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளன

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.நகரில் உள்ள நான்கு நலன்புரி நிலையங்களில் வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட 74 குடும்பங்களைச் சேர்ந்த 303 பேர் இடம்பெயர்ந்த நிலையில் தங்கியுள்ளார்கள் என யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை சென்.நீக்கலஸ் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும், யாழ்.அடைக்கல மாதா பாடசாலை நலன்புரி நிலையத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும், கொட்டடி லைடன் நலன்புரி நிலையத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும், கஜீதா முஸ்லிம் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேரும் தங்கி உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-300)



வலிகாமம் மேற்குப் பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி விழாவின்போது சமூக சேவையாளர் சி.இராசலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலர் எஸ்.புத்திரசிகாமணி, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். ஜோன்சன் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். *(203)*

## அரச ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

வடமாகாணத்தி[illegible]ள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் 2009ஆம் ஆண்டுக்கான சம்பளக் கொடுப்பனவுத் திகதிகள் பற்றிய விவரங்களடங்கிய சுற்றுநிருபம் சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு வடமாகாணத் திறைசேரியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2009 ஜனவரி 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை, மார்ச் மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை, ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி புதன்கிழமை, மே மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை, ஜூன் மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை, ஜூலை மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை, நவம்பர் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை, டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய திகதிகளே அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு நாள்கள் என இச்சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-300)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டுக்கான செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு ஆசிரியர்கள் அனைவரையும் வருகை தருமாறு அதிபர் வி.மாணிக்கம் கேட்டுள்ளார். (201)

## முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம்

நாவற்குழி, டிசெ.24

வடமாகாண பொதுச் சேவையின் கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கும் பதவிக்கு உயர்த்துவதற்காக கடந்த மே மாதம் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதன் பின் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம் தெரிவுசெய்ய கனிஷ்ட ஊழியர்கள் 14 பேருக்கு மாகாண முகாமை உதவியாளர்களாக அடுத்த மாதம் முதலாம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளது.

இப்பதவிக்கு உரியோர் கீழ்வரும் இடங்களில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

ப.சர்வேஸ்வரன் - வலயக் கல்விப் பணிமனை,வலிகாமம், ப.மகேசன் - வலயக் கல்விப் பணிமனை, வலிகாமம், இ.சர்வேஸ்வரன் - வலயக் கல்விப் பணிமனை, வலிகாமம், கி.யதீஸ்குமார் - வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம், திருமதி வி.விஜயராணி - வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம், கே.ஆரூரன் - வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், க.ஜீவானந்தன் - வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், சி.சிறீஞானேஸ்வரன் - வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம், வே.சந்திரமோகன் - பிரதேச சபை, புத்தூர், அ.பற்குணநாதன் - நகர சபை,சாவகச்சேரி, பொ.சிவநேசன் - வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, ம.யோகராசா - பிரதேசசபை, வேலணை, த.செல்வகுலேந்திரன் - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு, வ.அன்ரன் லெஸ்லி கூஞ்சே- பிரதேசசபை, முசலி, மன்னார். (203-288)

## வீதி சேதம்; மக்கள் சிரமம்

கரவெட்டி,டிசெ.24

கம்பர்மலை பத்தினி அம்மன் ஆலய வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளதால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கம்பர்மலை பத்தினி அம்மன் ஆலய வீதி அதிகளவான மக்கள் குடியிருப்புக்களைக் கொண்ட வீதியாகும். இந்த வீதி பல வருடங்களாக எவ்வித திருத்த வேலைகளும் இல்லாது குன்றும் குழியுமாக உள்ளதால் மேற்படி வீதியால் செல்லமுடியாதுள்ளது. மழை காலத்தில் பயணிகள் மிகவும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203-70)

## புதிய ஆண்டு பாடசாலைகள் தொடங்கும்போது மாணவர்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும்

### தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவுறுத்து

நல்லூர்,டிசெ.24

அடுத்த ஆண்டு முதலாம் தவணைக்காக ஜனவரி 5ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகள் தொடங்கும்போது அனைத்து மாணவர்களுக்குமான பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும் எனத் தீவுப் பகுதி கல்வி வலயப் பணிப்பாளர் ஆர்.இராதாகிருஷ்ணன் தீவுப்பகுதியின் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு உட்பட தீவுப்பகுதி மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்குரிய பாடப் புத்தகங்கள் தரம் 8இற்கான விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய புதிய பாட அறிமுகத்திற்கமைவான புத்தகங்கள் உட்பட தரம் ஒன்றுமுதல் அனைத்து வகுப்புக்களுக்குமான புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்டதாக நெடுந்தீவுக் கோட்டக் கல்வி அதிகாரி கே.அரசரத்தினம் தெரிவித்தார். (203-111)



நல்லூர் சமூக அபிவிருத்தி மன்ற அலுவலகத்தில் அண்மையில் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசவ் மங்கல விளக்கேற்றுவதையும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் சிறுவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(203)*

## ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்பும் மகத்தான பணியாற்றும் ஆசிரியர் சேவை பாராட்டுக்குரியது

### வங்கி முகாமையாளர் கருத்து

யாழ்ப்பாணம், டிசெ.24

அறிவியல் சமுதாயத்தை கட்டியெழுப்பும் ஆசிரியப் பணியில் உள்ளவர்களின் சேவை என்றென்றும் போற்றத்தக்கது.

இவ்வாறு தெரிவித்தார் மானிப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் க.சிறிதரன்.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தால் கடந்தவாரம் நடத்தப்பட்ட அதிபர் பதவி உயர்வு பெற்றுள்ள மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணனின் பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

ஆசிரியப் பணி என்பது எல்லோராலும் செய்யக்கூடியதல்ல. அது ஒரு மகத்துவமான, தெய்வீகமான காத்திரம்மிக்க பணி.

ஒரு சமுதாயத்தை ஆரோக்கியமுள்ளதாக மாற்றியமைக்கும் வலிமை இந்த ஆசிரியப் பணி ஆற்றுவோரிடம் உள்ளது.

அத்தகைய மகத்தான பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து அளப்பெரும் சேவை புரிகின்ற சேவையாளர்கள் வாழுங் காலத்தில் அவர்களின் புனிதமான சேவையினை நாம் பாராட்டி வாழ்த்துவதற்கு முன்வரவேண்டும்.

இந்த மட்டுவில் [illegible] பல வருடங்களாக ஆசிரியப் பணியில் மகத்தான பணிபுரிந்து அதிபர் பதவி உயர்வு பெற்று அடுத்த கட்ட தனது மகத்தான சேவைக்குத் தன்னைத் தயார்படுத்தும் ச.கிருஷ்ணன் அவர்களையும் இந்தச் சமூகம் பாராட்டி விழா எடுத்திருக்கிறது. இது பாராட்டத்தக்கது.

இவரின் இந்த மக்கதான சேவை மென்மேலும் தொடரவேண்டும் என்று நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில் மட்டுவில் பிரதேச கிராம உத்தியோகத்தர்களான க.வாமதேவன், வே.துரைசிங்கம், வே.கந்தையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற அதிபர் த.அப்புத்துரை, சமாதான நீதிவான் மா.தம்பையா ஆகியோரும் உரையாற்றினர். (203)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி, உளவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றில் விசேட சித்தியுடன் பட்டதாரிச் சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு இலக்கம் 177, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு - 5 என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 19.12.2008ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் நாராயணசாமி பாலகிருஷ்ணன்**

யா/நவாலி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி கௌரி திருவரங்கன் அவர்களது அன்புச் சகோதரன் **நாராயணசாமி பாலகிருஷ்ணன்** அவர்கள் 24.11.2008 அன்று இறைபதமெய்தியமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/நவாலி மகா வித்தியாலயம். ஊழியர்கள், மாணவர்கள்.

(81075)

## பயிற்சி

'சொன்ட்' அரச சார்பற்ற நிறுவனத்தால் பணியாளர் திறன்வளர்ப்பு பயிற்சி ஒன்று கடந்த மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி அலுவலகத்தில் நடத் தப்பட்டது.

நிறுவனப் பணிப்பாளரினால் நடத் தப்பட்ட இப்பயிற்சி வகுப்பில் 23 பணியாளர்கள் கலந்து கொண்டனர். (201)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகலிங்கம் சுரேஸ்** *(கண்ணன்)*

தாயின் மடியில் 10-05-1979 இறைவன் அடியில் 24-12-2000

இன்பத்தை யாசிக்கவே பனித் தேசம் அனுப்பி வைத்தோம்
கண்ணா நீ எங்கு சென்றாய்! தவிக்கின்றதே எங்கள் நெஞ்சம்
ஒற்றை மகனைப் பெற்றெடுத்தோம் - இறைவா! அவனையும் பறித்தாயோ!
உயிரைத் தான் எடுத்தாய் - உடலைத்தான் காணவிட்டாயோ - இறைவா!
பெற்றவர்களைக் கலங்கித் தவிக்கவிட்டு சென்றாயோ கண்ணா!
ரஷ்யாவில் உன்னுயிரையும் பயணத்தையும் முடித்து விட்டியே கண்ணா!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*


*பிரிவால் துயருறும்:*
**தாய், தந்தை, சகோதரர்கள்.**

*விவேகானந்தா வீதி,*
*மஞ்சத்தடி, இணுவில்.*

*(81084)*

# நினைவஞ்சலிகள்

**இரண்டாம் ஆண்டு** | **நான்காம் மாதம்**





**அமரர் கமலநாதன் துஷ்யந்தன்**
(LIC யாழ்.கிளை முகவர்)

**அமரர் கமலநாதன் மயூரன்**
(பெங்களூர் பல்கலைக்கழகம், இந்தியா)

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 05-12-1982 | 24-12-2006 | 31-08-1987 | 15-09-2008 |

**தாயின் மனம் தத்தளிக்க**
**தந்தை மனம் தவித்திருக்க**
**அம்மம்மா மனம் கதறியழ**
**பூட்டி இங்கு ஏங்கிநிற்க - மகன்களே**
**எங்கு சென்றீர் எம்மைவிட்டு?**
**இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர்**
**என்றிருந்தோம் இடை நடுவில் தவிக்கவிட்டு**
**நீங்கள் ஏன் மறைந்து விட்டீர்கள்!**

*இல.521/5, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

(81083)


# IDM

*Nation's ICT Academy*
*Pre University College*
*Affiliated University College*

# O/L
**பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்காக.....**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**BTEC - Diploma in ICT Application (DICTA)**
**Edexcel International - UK**

**Course Contents**

*Unit I*- Fundamentals Information & Communication Technology

*Unit II*- End user **ICT** Applications.
- Ms Windows - Ms DOS - Linux - Ms Word - Ms Excel
- Ms Powerpoint - Ms Access - Flash - Photoshop.

*Unit III*- Personal Skills Development.

*Unit IV*- Web Design Development

**Duration Only 03 Months**

***Select a Course of your choice***

* Flash
* Dreamweaver
* Pagemaker
* Adobe Photoshop
* Adobe Illustrator
* CorelDRAW
* Certificate in Multimedia
* Certificate in Desktop Publishing
* Certificate in Audio & Video Editing
* Certificate in GIT Course
* Certificate in Computer Aided Designing using AutoCAD
* Certificate in Applied Electrical & Electronic Engineering
* Computerized Accounting Packages
* Windows XP/2000
* MS Office (Word, Excel, Access, PowerPoint, Outlook)
* JAVA, VB.Net, PHP, MySQL, C++

**இலங்கை அரசினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனத்தில் இன்றே இணையுங்கள்!**

**IDM Afflated University College - Jaffna Dst. Branch**

216, Navalar Road, Jaffna. | "Happy House" Thavady Road, Manipay | Kodikamam Road, Nelliyady.

T.P: 021 222 9901 Web - www.idm.edu 0602219639


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவைகள், அளவைகளுக்கு முத்திரையிடல்

ஆனைக்கோட்டை, டிசெ.24

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகமான பண்டத்தரிப்பு அலுவலகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி நடைபெறுமென யாழ்.மாவட்ட செயலக நிறுவைகள் அளவைகள் பகுதிப் பொறுப்பதிகாரி வை.கிருஸ்ணதாசன் தெரிவித்தார்.

அன்றைய தினம் காலை ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மேற்படி முத்திரையிடும் பணி நடைபெறவுள்ளதால், பண்டத்தரிப்பு உப அலுவலகத்திற்கு உட்பட்ட அனைத்து நிறுத்தல் அளவைகளுக்கும் தவறாது முத்திரையிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-20)

## சங்கானைப் பிரதேசத்தில் புதிய சிவில் நிர்வாக அலுவலகம்

யாழ்ப்பாணம், டிசெ.24

வெளிமாவட்ட பிரயாண அனுமதி பெறுவதற்கான சிவில் நிர்வாக அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை சங்கானைப் பாதுகாப்புப் படை முகாமில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தில் சித்தன்கேணி சந்தி முதல் சங்கானை தெற்கு, மேற்கு, மத்தி, கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தோரும், சங்கரத்தைப் பிரதேச கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியினரும் மற்றும் வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களும் வெளிமாவட்டத்திற்கான பிரயாண அனுமதிப் பத்திரங்களை கையளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்தன்கேணிச் சந்தியிலிருந்து காரைநகர், வட்டுக்கோட்டை, சுளிபுரம், தொல்புரம் பிரிவுக்குட்பட்டோர் வட்டுக்கோட்டை, மாவடி சிவில் நிர்வாக அலுவலகத்திலும், சங்கரத்தை - துணைவிச் சந்தியில் இருந்து அராலி நோக்கிய பகுதியில் உள்ள அராலி கிழக்கு, மத்தி, மேற்கு பிரிவைச் சேர்ந்தோர் அராலித்துறை சிவில் நிர்வாக அலுவலகத்தினூடாக வெளிமாவட்டத்திற்கான பிரயாண அனுமதியைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (201-29)

# விவசாயத்துறை மூலம் குடாநாட்டை வளம்படுத்தி விருதுகளையும் வென்றெடுத்த விவசாயிகள்


யாழ்.விவசாயத் திணைக்களம் யாழ். மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட சிறந்த விவசாயிகளைக் கௌரவித்தது. போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பெற்ற எட்டு விவசாயிகள் தமது கருத்துக் களை உதய னுடன் பகிர்ந்து கொண்டனர். அவர்களது கருத்துக்களை ஏனைய விவசாயி களும் அறிந்து கொள்ளும் பொருட்டு இங்கு பிரசுர மாகின்றன. மற்றும் நான்கு பேரின் கருத்துக்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

**திருமதி கு.தனேஸ்வரி**
**(சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி) நவக்கிரி.**



எனது கணவரது காணியில் ஒரு பகுதியை குத்தகைக்கு கொடுத்துவிட்டு மறு பகுதியில் விவசாய பயிர்ச் செய்கைகளை மேற் கொண்டு வருகிறேன். விவசாய வருமானத்தைக் கொண்டு மிகவும் பெறுமதி வாய்ந்த வீட்டையும் கட்டியுள்ளேன். நல்ல முறையில் நாங்கள் நிலங்களைப் பயன்படுத்தினால் நிச்சயம் உரிய பலன் கிடைக்கும் என்ப தில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. கஷ்டத்தின் மத்தியிலும் என்னுடைய விடாமுயற்சி தான் எனது குடும்பத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது. நம்பிக்கை என்பது முக்கியம். விவசாயிகள் தளராத நம்பிக்கை யுடன் தமது வேலைகளில் ஈடுபட்டால் நிச்சயம் அதற்குப் பலன் கிடைக்கும். அதற்கு நானே சான்று. எனது பிள்ளைகளும் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்தார்கள். கமநல உத்தியோகத்தர் களும் அவ்வப்போது எனது பயிர்ச் செய்கைகளைப் பார்வையிட்டு உதவி னார்கள்.

**இ.இலட்சுமணர் (60)**
**(சிறந்த சேதனப் பண்ணையாளர்) அச்செழு.**



நெடுங்கேணியில் கடை ஒன்றை நடத்திவந்த நான் 1984 இல் அதனை முழுமை யாக இழந்த நிலையில் இங்கு வந்தேன். தொழில்கள் எதையாவது செய்யலாம் என்றால் அதற்கான முதலீடு இல்லாத நிலை. சரி சிறிய அளவிலாவது வீட்டுத் தோட்டம் செய்தால் கொஞ்சமாவது பயன் கிட்டாதா என்ற எண் ணத்துடன் சிறிதாக தோட்டச் செய்கை யில் ஈடுபட்டேன்.

இன்று எனது பண்ணையில் பயிர் வகைகள் 20 ஆயிரம் கன்றுகள் வரை உள்ளன. முன்னர் இரசாயன மருந்து வகைகளைப் பயன்ப டுத்திய நான் இப் போது முழுமையாக சேதனப் பசளை மட்டுமே பயன்படுத்துகிறேன். விவசாயத் திணைக்களம் சேதனப் பசளைகளின் பயன்பாடு குறித்த தெளிவான அறிவினை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. அதன் பயனையும், நன்மைகளையும் எனது பண்ணையூடாக அனுபவ ரீதியாக உணர முடிகிறது. இதனால் நமக்கு இரசாயனக் கலவைகளுக்கான பணச் செலவு இல்லாமல் போகின்றது. கால்நடைகளின் கழிவுகள், கிளிசிறியா, வேம்பு என்பவற்றின் கழிவுகளைப் பயன்ப டுத்தியும் வீட்டில் சேரும் கழிவுப் பொருள் களையும் உரிய முறைப்படி சேதனப் பசளையாக மாற்றி எமது நிலங்களில் பயன் படுத்தினால் நல்ல விளைச்சலைப் பெற முடியும்.

விவசாய அனுபவங்கள் பகிரப்பட வேண்டியவை. அப்போதுதான் பல்வேறு விடயங்களை அறியக் கூடியதாக இருக் கும். விவசாயத்தில் மாத்திரமல்ல எந்தத் துறையானாலும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**தி.தங்கவேலு (42)**
**(சிறந்த சுயவிதை நெல் உற்பத்தியாளர்) நாவற்குழி கிழக்கு.**



கடந்த 2000 ஆண்டில் தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியா சென்றுவிட்டு 2002 இல் நாவற் குழிக்கு வந்து சேர்ந்தேன். மீண்டும் இங்கு நெற்செய்கையைத் தொடர விதை நெல் கிடைக்காது மிகவும் கஷ்டப்பட்டேன். எனினும் 2003 இல் கமநல சேவைகள் திணைக்களம் மூலம் அடிப்படை விதை நெல்(ஏ.ரி.402 நான்கு மாதப் பயிரினம்) கிடைத்தது. இதன்போது ஏற்பட்ட மகிழ்ச் சிக்கு ஈடு எதுவுமே இல்லை.

நல்ல இனவிதை நெல்லை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண் டும். என்பது எனது இலட்சியம். அதற்காகத் தரமான விதை நெல் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என விரும்பிய போது விவசாயத் திணைக்களத்தின் உதவி யுடன் அடிப்படை விதையாக வழங்கப் பட்ட நெல்லை வைத்துத் தொடர்ச்சியாக கலப்படமில்லாத விதை நெல்லை உற் பத்தி செய்கிறேன். 2007- 2008 காலபோகத் தின் போது 16 விவசாயிகளுக்கு ஒரு மூடை விதை நெல் 3000 ரூபாவிற்கு வழங்க முடிந்தது. இந்த உற்பத்தி மூலம் எனது செலவுகள் போக ரூபா 20 ஆயிரத்துக்கும் அதிகமாக வருமானம் கிடைத்தது. எமது குடும்பம் விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்டுள்ளது. விதை நெல்லைப் பொறுத் தவரை வருடா வருடம் குறிப்பட்ட ஓரிடத் தில் விதை நெல் வயல் துண்டத்தை ஏற்படுத்தி சிறந்த விதைநெல்லை உற் பத்தி செய்ய முடியும்.

அறுவடையின் போது வேறு நெல் கலக்காது பாதுகாப்பாக தலையடித்து சிறப்பான களஞ்சியத்தில் பாதுகாக்க வேண்டும். ஓரளவு கூழத்துடன் (சுத்தம் செய்யாது) களஞ்சியப்படுத்துவதன் மூலம் சந்துப் பூச்சிகளிடத்தில் இருந்து பாதுகாத்து, ஆடியில் தூற்றி, ஆவணியில் விதைக்கலாம்.

**அ.இராசேந்திரம்**
**(சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்) சிறுவிளான், இளவாலை.**



இரசாயன உரங் களைப் பயன்படுத்தாது இயற்கைப் பசளைகளை உபயோகித்தே செய்ய வேண்டும் என்பதே எனது திட்டம். வீட்டில் சேரும் குப்பைகளை 12 அடி நீளமும் 6 அடி அகலமும் 4 அடி ஆழமும் கொண்ட நான்கு தொட்டிகள் அமைத்து அவைகளுக்குள் ஆடு மாடு களின் எரு, சலம் ஆகியவற்றை ஊற்றி விடுவேன். ஒரு மாதத்தில் இவை பசளையாகிவிடும். திரும்பவும் கொத்திக் கலந்து 15 நாள் களின் பின் பயிர்களுக்கு இதனைப் பாவிக் கிறேன். விவசாயிகள் இந்த முறையைப் பயன்படுத்த வேண்டும் என்பதே எனது விருப்பம். நாள் 120 பரப்பில் பயிர் செய்கிறேன். எல்லாவிதமான காய்கறிகளும் முந்திரி ஆகியவற்றுடன் நெல் செய்கையும் உண்டு. நெல்லுக்கும் முழுமையாக இயற்கை உரத்தைப் பயன்படுத் துவதே எனது நோக்கம். விவசாயிகளுக்கு உதவு வதில் திணைக்கள அதிகாரிகள் உத்தி யோகத்தர்கள் போதிய அக்கறை காட்டுகின்றார்கள். எங்களைப் போன்றவர்கள். அவர்களை அணுகி பிரச்சினைகள் சந் தேகங்களை நீக்கிக் கொண்டு அதற் கமைய செயற்பட்டால் மேலும் வளர்ச்சி பெறமுடியும் என்று நம்புகின்றேன்.

சந்திப்பும், படங்களும்: நம்பி

(முற்றும்) *

# இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகின்றனர் என்பதில் உண்மைகிடையாது!

## மலேசியாவின் முன்னாள் பிரதமருக்கு ஜே.வி.பி. எம்.பி விளக்கம்

"இலங்கையில் தமிழர்கள் இனப்படு கொலைக்கு ஆளாகின்றனர் என்று கூறப் படுவதில் எந்தவித உண்மையு மில்லை."

இவ்வாறு ஜே.வி.பி எம்.பியும் நாடா ளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான ஆர். சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இம்மாதம் 18 ஆம் திகதி மலேஷியாவின் முன்னாள் பிரதமர் மகதிர் முஹமட்டைச் சந்தித்து உரையாடியபோதே சந்திரசேகரன் இதைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப் படுகிறார்கள் என்று, உலகம் முழுவதிலும் வியாபித்திருக்கும் பயங்கரவாத் திற்கு ஆதரவானவர்கள் கூறிவருகின் றனர். இந்தப் பிரச்சாரத்தில் எந்த உண் மையுமில்லை.

பிரிவினைவாதம் செயற்படும் வடக்கு - கிழக்கைவிட அதிகமான மக்கள் இலங்கையில் ஏனைய பிரதேசங்களிலே வாழ்கின் றனர். யுத்தத்தின் காரணமாக வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேறும் மக்கள் தெற்கை நோக்கியே வருகின் றனர்.

ஆகவே, இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே எவ்வித பாகுபாடும் இல்லை. இன்று வர்த்தகத் தலைநகரான கொழும்பை எடுத்துக் கொண் டால் அங்கு பிரபல வர்த்தகர்களாக தமிழர்களே இருக்கின்றனர். நான் கூட தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத் தும் இந்தியவம்சாவளிப் பிரஜைதான்.

மேற்படி பிரிவினைவாத பயங்கரவா திகள் 1990களில் வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை 24 மணித்தியாலத்திற்குள் வடக்கில் இருந்த வெளியேறவேண்டு மென்ற கட்டளையிட்டு இன சுத்திகரிப்பை மேற்கொண்டனர். அது மாத்திரமல்ல கிழக்கு மாகாணத்தின் பள்ளிவாசல் ஒன்றி னுள் மதக் கடமையில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்களைப் படுகொலை செய்தனர்.

அவர்களுடைய கருத்துக்கு உடன்ப டாத தமிழ் அரசியல் வாதிகளைப் படு கொலை செய்தனர். இலங்கையின் வெளிநாட் டமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களையும் படுகொலை செய்தனர். புலி களுக்கு பாலூட்டிவளர்த்த இந்திய பிரதமர் ரஜீவ்காந்தியைக் கூட இந்த புலிகள் படு கொலை செய்ததை நீங்கள் அறிவீர்கள்.

இந்தப் புலிகள் இலங்கைக்கு மாத்திர மல்ல முழு உலகிற்குமே அச்சுறுத்தலாக இருக்கின்றனர். எமக்குத் தெரிந்த வரையில் மலேசியாவிலும் கூட, புலிகளுக்கு அதரவான குழுவினர் புலிகளுக்காக உதவிகளை சேகரித்துவருகின்றனர். இந்த நிலைமையைத் தடுக்குமாறு நான் உங்களிடம் கனிவோடு வேண்டுகிறேன். இலங்கையில் செயற்படும் பிரிவினை வாதிகளுக்கு உலகின் பல்வேறு நாடுகள் உதவி வருவதை. நீங்கள் அறிவீர்கள். விசேடமாக, இந்தியா புலிகளை பாது காப்பதில் தற்போது ஈடுபட்டுவருகிறது. இது கவலைக்குரியவிடயம்.

சந்திரசேகரனின் கருத்துக்களை செவி மடுத்த மலேசியாவின் முன்னாள் பிரமர் மகதிர் முஹமத் கூறியவை வருமாறு:-

இன்று உலகம் பயங்கரவாதத்தின் பாரதூரமான அச்சுறுத்தல்களை எதிர் கொண்டுள்ளது. துரதிஷ்ட வசமாக இலங் கையும் அதன் பலிக்கடாவாக மாறியுள் ளது. யுத்தத்தை நான் விரும்பவில்லை. யுத்தத்தின்போது இருபக்கத்திலும் மனி தர்கள் மடிகிறார்கள். யுத்தமில்லாத இலங்கை இதைவிட முன்னேற்றமடைந்த இலங்கை யாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை யாகும். எமது நாட்டிலும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கின்றன. மலேசியா வில் மலே, சீனர், இந்தியர் ஆகிய பிரதான மான இனக் குழுமங்கள் மூன்று இருக் கின் றன. என்றாலும் இந்தப் பிரச்சினைக்கு நாம் விடைகண்டுவருகிறோம்.- என்றார்.

# செயலமர்வு

வடமராட்சி, டிசெ.24

அடுத்த ஆண்டுக்கான பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்களுக் கான அறிவுறுத்தல் செயலமர்வு எதிர் வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை வடமராட்சி வலயக்கல்வி அலுவலக கணனி வள நிலையத்தில் நடைபெற வுள்ளது.

தர உள்ளீடு, உயர் கல்வி செயற்பாடுகள் தொடர்பான இவ்வாண்டு டிசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய செலவுக் கூற்றுக்குரிய பூர்த்தி செய்த இரு படிவங் களையும், அடுத்தாண்டு தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர் விவரங்களை பாடரீதியாகவும், வகுப்பு ரீதியாகவும் கொண்டு வரு மாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (201)

# வேம்படி பாடசாலை மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கற்கும் தரம் 10 க்கு மேற்பட்ட மாணவர்களை எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு சீருடை யுடன் பாடசாலைக்கு வருமாறு அதிபர் கேட்டுள்ளார். (202)

# படையினரின் வன்னி நடவடிக்கைக்கு எதிரான புலிகளின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் தீபன்

## கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்

சிறிலங்கா படையினர் தற்போது மேற்கொண்டு வரும் அனைத்து படை நடவடிக்கைகளுக்கும் எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தும் எதிர்ச் சமரின் ஒட்டுமொத்த தளபதியாக கேணல் தீபன் செயற்படுவதாக கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது வன்னியில் படையினர் மேற்கொண்டுவரும் "வன்னி நடவடிக் கைக்கு" எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் அனைத்து சமர்க் களங்களிலும் ஒருங்கிணைப்புத் தளபதி யாக கேணல் தீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வடபோர் முனையின் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய கேணல் தீபன், தற்போது வன்னிப் பெரும் போர்க்களத்தின் முழுப் படை நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு, நேரடியாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெறிப்படுத்தல்களையும், ஆலோசனைகளையும் பெறுவதுடன், போர் நடவடிக் கைகள் தொடர்பான நிலவரங்கள் நேர டியாக அவருடன் பகிர்ந்து செயற்ப டுகின்றார்.

பெரும் மண் அணைகளை அமைத்து முன்நகரும் படையினரை வழிமறித்து தாக்கியழிக்கும் உத்திகளை உருவாக்கி, அவற்றில் மிகுந்த தேர்ச்சிபெற்றவராக அவர் விளங்குகின்றார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





இந்து கலாசார முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுப் பேருரையும் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

அவரது உருவப்படத்திற்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் நினைவுரையாற்றிய தமிழகப்பேராசிரியர் இரா.செல்வகணபதி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# வடமாகாண முகாமை உதவியாளர் சேவைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 55 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கு மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு மேலும் 55 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர்களுக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு திருகோண மலையில் அமைந்துள்ள திணைக்களத் தலைமைய கங்களுக்கு நியமனத்தை வழங்கியுள்ளது.

நியமனக் கடிதங்கள் எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலையில் அமைந்துள்ள மாகாண பொது நிர்வாக செயலகத்தில் வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டமை தொடர்பான கடிதங்களை யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் உடன் பெற்றுக் கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.ஜெயச்சந்திரன்(இருபாலை), எஸ்.சுனித்தா (கொக்குவில்), ரி.குமார் (தொண்டைமானாறு), வி.வைத்தீஸ்வரன் (சுன்னாகம்), ஐ.கதிர்காமினி(தம்பசிட்டி), ஆர்.சுதாகரன்(புன்னாலைக்கட்டுவன்), எஸ்.ப்ருந்தி(சாவகச்சேரி), ஆர்.கார்த்திகா (நீர்வேலி), எஸ்.உமாஜோதினி (சாவகச்சேரி), ரி.தயாபரன்(காரைநகர்)

ஆர்.தர்சினி(கரவெட்டி), எஸ்.அருணன்(கோப்பாய்), கே.ஜெயவாணி (கரவெட்டி), வி.எஸ்.ஜெனிஷா (ஆனைக்கோட்டை), எஸ்.நிஷாந்தன்(கொக்குவில்), வி.சக்திதேவி(மாதகல்), எஸ்.துவாரகா(கொக்குவில்), என்.நவதாசன் (வரணி), சி.தமிழன்பன்(கல்வியங்காடு), எம்.கார்த்திகா(அல்வாய்)

எஸ்.வைதேகி(உரும்பிராய்), என்.சஞ்சீவ்(யாழ்ப்பாணம்), என்.சுவிந்தன் (சாவகச்சேரி), கே.நிஷாந்தினி(கொடிகாமம்), ஏ.சி.மேரி அனித்தா(கரவெட்டி), வி.நிறஞ்சினி(அல்வாய்), கே.தயாளினி (சுன்னாகம்), எஸ்.கேமகலா(புத்தூர்), கே.பிரபாங்கினி(சாவகச்சேரி), எஸ்.தேனுதயா (யாழ்ப்பாணம்)

சி.ஜெயசுந்தரேஸ்வரா(கொக்குவில்), எம்.அபிராமி(அரியாலை), வை.நிமலன் (கோண்டாவில்), வி.சுகிதரன் (ஆனைக்கோட்டை), எஸ்.நிரோஷிகன் (கொக்குவில்), ஆர்.வாசுகி(கொக்குவில்), ரி.ஸ்ரீபராபரன்(அச்சுவேலி), எஸ்.ரேகா (மானிப்பாய்), ரி.மலர்விழி(யாழ்ப்பாணம்),

ஆர்.மேரிநித்தியா(கல்வியங்காடு), எஸ்.திகழ்மதி(வட்டுக்கோட்டை), எஸ்.மிகயதர்சினி(சுண்டுக்குளி), ரி.றாஜினி (பண்டத்தரிப்பு), எஸ்.காஞ்சனா (யாழ்ப்பாணம்),எஸ்.றஜீபன்(ஏழாலை), சி.பிரிந்தா (சுன்னாகம்), பி.சுரேந்தர் (வல்வெட்டித்துறை), எஸ்.அம்பிகாபதி(மானிப்பாய்), எஸ்.செந்தூரன் (சுன்னாகம்)

எஸ்.இளங்கீரன்(கரவெட்டி), ரி.யசிதரன்(மானிப்பாய்), ரி.கபிதா(ஏழாலை), ஆர்.ஜெயகௌரி (கோண்டாவில் கிழக்கு), கே.சத்தியறஞ்சினி(அரியாலை)

கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு IIIஇற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை மூலம் தெரிவு செய்யப் பட்டு நியமனம் வழங்கப்பட்டவர்களின் விவரம் 9 ஆம் பக்கத்தில்.

(202-201-288)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, டிசெ.24

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மீக சஞ்சிகையின் மார்கழிமாத இதழ் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் அருள்லிங்கம் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் குப்பிளானைச் சேர்ந்த கிராம சேவையாளர் எஸ்.பரமநாதன் வெளியீட்டுரையையும், முன்னாள் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவார்கள்.

(203-236)

## உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி நடவடிக்கை மதிப்பீடு

மானிப்பாய், டிசெ.24

நாடளாவிய ரீதியில் தேசிய வரவு - செலவு திட்டத் திணைக்களம் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகளை மதிப்பீடு (2008) செய்யவுள்ளது.

வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் (பதில்) எம்.மஹிந்தசாலிய இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

நாட்டில் செயற்படும் மாநகர, நகர, பிரதேச சபைகளின் வரவு - செலவு நிலைமைகள் பற்றிய மதிப்பீடு விரைவில் நடத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக சபைகளுக்கு கிடைக்கும் வரிவருமானங்கள், மத்திய - மாகாண சபைகளில் இருந்து கிடைக்கும் மானியங்கள், மீண்டுவரும் செலவினங்கள் (சம்பளம், மேலதிகநேரக் கொடுப்பனவு), மூலதன செலவீனம் மற்றும் நிறுவனங்களில் கடமையாற்றும் அமைய, தற்காலிக, நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் செலவின விவரங்களை முழுமையாக தொகுத்து உள்ளூராட்சி சபைகள் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு வரவு - செலவுத் திட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி மலர்மதி கங்காதரன் (0112 - 484858), வரவு - செலவுத் திட்ட உதவியாளர் எம்.எச்.எம்.அமீன் (0112 - 484965) எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

(203-95)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கிருஸ்ணன் விமலேஸ்வரன்

(யாழ்.மத்திய கல்லூரி, பாதுகாப்பு உத்தியோகத்தர்)

(24.12.2008)



தோற்றம் 07.04.1974 மறைவு 24.12.2005

கைபிடிக்குள் உன்னை வைத்து
கண்ணின் மணிபோல் காத்திருந்தோம்
காலமெல்லாம் எம்மை கண்ணீரில்
தவிக்கவிட்டுத் தனி வழி சென்றதென்ன செல்வமே!

தவசிகுளம்,
கொடிகாமம். (81104) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை



மில்லேன், மானிமனை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், இல.163, ஹவ்லொக்ரவுண், கொழும்பு - 05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை கடந்த (20.12.2008) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் முருகேசப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வீரபாகு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் பன்னீர்செல்வம் (கொழும்பு - 05) காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் துரைசிங்கம் (பாலா), சற்குணசீலன், காஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் சதாசிவம் (இளைப்பாறிய தபாலதிபர்), ஐயாத்துரை (ஓவசியர்), காலஞ்சென்றவர்களான நல்லம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதினி, நளினி, சசி, காங்கேயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் சிவராசா - கம்ஷவதனி (பூமா - மல்லாகம்), சியாதரன் - வாசுகி, சிறிமதி (கொழும்பு), கௌசிகன், சாருறாம், ருக்ஷி, திசான், சாதனா, நிலோதனா, ரமணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜனார்த்தனி, பிரியங்கன், திவ்யப்பிரியா, தனலக்ஷன், தீவிகா, சோபிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜயவர்த்தனா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (24.12.2008) புதன்கிழமை பி.ப.4 மணியளவில் கனத்தை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மு.பன்னீர்ச் செல்வம்,
இல.161, கவ்லொக்ரவுண் - Col - 05.
T.P. - 011 2594244
077 7066148

சி.கம்ஷவதனி (பூமா),
கோயில் வீதி,
மல்லாகம்.

சிவராசா (ராசா -பேரன்),
டீசல் என்ஜினியரிங், சிவன் கோயிலடி, சுன்னாகம்.
T.P. - 077 6849027

### சிவக்கொழுந்து யோகேஸ்வரன் (காந்தி)

(கோண்டாவில், வவுனியா இ.போ.ச.ஊழியர்)



திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து யோகேஸ்வரன் 17.12.2008 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் இராசபூபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தியின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி (ராணி), நாகபூசனி (குழந்தை), தேவராணி, லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தரலிங்கம் (லண்டன்), தாய் மாமனும் சுப்பிரமணியம், துரைசிங்கம் (தேநீர்க்கடை உரிமையாளர்), சபேசலிங்கம் (இலங்கை மின்சார சபை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.12.2008 ஞாயிற்றுக்கிழமை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராய வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
077 6512375 [81114]

தகவல்:
தாய் (இராசபூபதி),
நாதன் (லண்டன்),

## மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

### திருமதி பத்மநாதன் மங்கையர்க்கரசி (லலிதா)



யாழ்ப்பாணம், வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மாளிகாவத்தையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் மங்கையர்க்கரசி (லலிதா) அவர்கள் 17.12.2008 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும் வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி பூதப்பிள்ளை இராசசவுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் திருமதி வேலாயுதம் பாலயோகினி (கொழும்பு), திருமதி தியாகராசா யோகேஸ்வரி (யாழ்ப்பாணம்), பூதப்பிள்ளை பரம்சோதிலிங்கம் (டென்மார்க்), திருமதி பரமேஸ்வரி மில்லர் (ஜேர்மனி), திருமதி மகாதேவன் விமலாதேவி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி இராமநாதன் ரோக்கனியின் பாசமிகு தாயும் கணேசன் இராமநாதன் (கட்டார், கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2008ஆம் திகதி மாளிகாவத்தை தொடர்மாடி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பொரளை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தபோது பல வகையிலும் உதவியவர்களுக்கும், வைத்தியசாலை வைத்திய நிபுணர்களுக்கும் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு.திருமதி இராமநாதன் ரோக்கனி (மகள், மருமகன்)
B 35-1-4, N.H.SCHEME, MALIGAWATTA, COLOMBO - 10.

(சி/556222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ அங்கீகார மாநாட்டுக்கு அனுமதி?

## பொலிஸ் கமிஷனரின் தடை உத்தரவை ரத்துச் செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, டிசம்பர் 24

**சென்னை அமைந்தகரையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நடத்தவுள்ள இளம் சிறுத்தைகள் எழுச்சி மாநாடு மற்றும் தமிழீழ அங்கீகாரக் கோரிக்கை மாநாட்டுக்கு அனுமதி மறுக்கும் உதவிப் பொலிஸ் கமிஷனரின் உத்தரவை உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ரத்து செய்து தீர்ப்பளித்தது.**

சென்னை அமைந்தகரையிலுள்ள புல்லா அவென்யூவில் நாளைமறுதினம் (26ஆம் திகதி) இளம் சிறுத்தைகளின் எழுச்சி மாநாடு மற்றும் தமிழீழ அங்கீகாரக் கோரிக்கை மாநாடு சென்னையில் நடைபெறும் என்று அக்கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் அறிவித்திருந்தார்.

ஆனால், இந்தக் கூட்டத்துக்கு அனுமதி மறுத்து அண்ணாநகர் உதவிப் பொலிஸ் கமிஷனர் டிசம்பர் 20ஆம் திகதி உத்தரவிட்டார். இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட இளைஞரணி செயலாளர் இரா. செல்வம் மனுத் தாக்கல் செய்தார்.

அதில் - ஈழ தமிழர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கோரி ஏற்கனவே எங்கள் கட்சி அமைப்புகள் சார்பில் உண்ணாவிரதம், ஊர்வலம் போன்றவற்றை நடத்தியுள்ளது.

இளம் சிறுத்தைகள், எழுச்சி பாசறை சார்பில் வரும் 26ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு கூட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம். இதற்காக, கடந்த 10ஆம் திகதி அனுமதி கேட்டு அண்ணாநகர் டி.எஸ்.பியிடம் விண்ணப்பித்தோம். ஆனால் கூட்டத்தை நடத்த அனுமதி தர அந்த அதிகாரி மறுத்துவிட்டார்.



நாங்கள் தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவோம் என்று பொலிஸார் அஞ்சுகிறார்கள். நாங்கள் ஈழ தமிழர் குறித்து தான் பேசுவோம். ஆகவே, குறிப்பிட்டபடி வரும் 26ஆம் திகதி கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். அனுமதி மறுத்து பொலிஸ் அதிகாரி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் - என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி கே. சுகுணா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த பிறகு நீதிபதி அளித்த தீர்ப்பு வருமாறு-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுக்கூட்டத்துக்கு அனுமதி மறுக்கும் விடயத்தில் மாநகர பொலிஸ் சட்ட விதி பின்பற்றப்படவில்லை.

அதேபோல், இந்தப் பொதுக்கூட்டத்தில் தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக பேசமாட்டார்கள் என்று மனுதாரர் தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அண்ணாநகர் உதவி பொலிஸ் கமிஷனரின் உத்தரவு ரத்துச் செய்யப்படுகிறது.

பொதுக்கூட்டத்துக்கு அனுமதி கோரிய விண்ணப்பத்தை, அண்ணாநகர் உதவிப் பொலிஸ் கமிஷனர் மீண்டும் பரிசீலித்து டிசம்பர் 23ஆம் திகதிக்குள் (அதாவது நேற்றைக்குள்) உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசமாட்டோம் என்று உறுதி அளிக்கும் மனுவை உதவிப் பொலிஸ் கமிஷனரிடம் மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.



திருமங்கலம் தொகுதி துணைத் தேர்தல் அதிகாரி சேதுராமனிடம் தி.மு.க. வேட்பாளர் லதா அதியமான், வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்தார். அருகில் உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின், மு.க.அழகிரி, காங்கிரஸ் எம்.எல்.ஏ. ராஜேந்திரன் உள்ளனர்

# அடுத்தவாரம் கொழும்புக்கு பிரணாப்

### கனிமொழி எம்.பி. நம்பிக்கை



இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இவ்வாரம் நிச்சயமாகக் கொழும்புக்கு விஜயம் செய்வார் - என்று கவிஞரும் இந்திய மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பிரச்சினைத் தீர்வுக்கு தமிழகக் கட்சிகள் அனைத்தும் இணைந்து குரல் கொடுத்திருந்தால் மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் வலிமையாக இருந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்த செவ்வியில் மேலும் கூறியவை வருமாறு-

தமிழகத்தில் உள்ளவர்கள் தங்களுடைய அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை இலங்கைப் பிரச்சினையிலும் காட்டுகிறார்கள். சகல பிரச்சினைகளையும் போலவே இதையும் அரசியல் ஆக்குகிறார்கள். இலங்கைப் பிரச்சினையையும் வாக்கு வங்கியாக மாற்றும் முயற்சியாக சிலர் பார்க்கிறார்கள். ஒரு இனமே அழிக்கப்படும் கொடுமையை அரசியலாக்கும் தன்மையால்தான் இப்பிரச்சினையில் இன்னும் முன்னேற்றம் கிடைக்கவில்லை. தமிழகத்தில் உள்ள எல்லா கட்சிகளும் இணைந்து குரல் கொடுத்திருந்தால் மேலும் வலிமையாக இருந்திருக்கும். இலங்கை விவகாரத்தில் தி.மு.க. எப்போதும் துணிந்து செயற்படுவதில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டை நான் அடியோடு மறுக்கிறேன் தி.மு.க. இதைவிட என்ன செய்யமுடியும்?

இலங்கை விவகாரத்தால் நிறைய இழப்புகளைச் சந்தித்தது தி. மு.க. தான். நாம் சொல்வதைக் கேட்கும் ஒரு மத்திய அரசு கிடைத்திருக்கிறது. அத்தகையதொரு அரசு கவிழும் சூழலை உருவாக்குவதால் யாருக்கு என்ன பயன் கிடைத்து விடும்?

தி.மு.க. பற்றி குறைசொல்லும் வீரர்கள் எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் எங்கே போனார்கள்?

தமிழக முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் டில்லி சென்று நேரடியாகப் பிரதமரைச் சந்தித்து இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மனுக் கொடுத்திருக்கின்றோம். இதன் அடிப்படையில் நிச்சயமாக இவ்வாரம் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்வார் என்ற நம்பிக்கையுள்ளது - என்றார்.

# ஈழத் தமிழர் விடயத்தில் தமிழகக் காங். சிங்கள அரசுக்கு ஆதரவான போக்கு!

## கடுமையாகக் கண்டிக்கிறார் பழ. நெடுமாறன்

சென்னை, டிச.24

ஈழத் தமிழர் பிரச்சினையை தமிழக காங்கிரஸ் திசை திருப்ப பார்க்கிறது. இந்தப் பிரச்சினையில் தமிழகமே ஒன்றுபட்டு நிற்கும் போது காங்கிரஸிலிருக்கும் சிலர் வேண்டும் என்றே திட்டமிட்டு சிங்கள அரசுக்கு ஆதரவான போக்கில் நடந்து கொள்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

- இவ்வாறு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும், இலங்கை அரசுக்கு இந்திய அரசு இராணுவ ரீதியான உதவிகள் அளிக்கக் கூடாது ஆகிய இரு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் ஒன்றுபட்ட போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களை சீர்குலைக்கும் வகையிலும் பிரச்சினையைத் திசை திருப்பவும்



தமிழகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் செயற்பட்டு வருகின்றனர். தமிழகமே ஒன்றுபட்டு நிற்கும்போது இவர்கள் வேண்டும் என்றே திட்டமிட்டு சிங்கள அரசுக்கு ஆதரவான போக்கில் நடந்து கொள்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஈழத்தமிழர்களின் துயரைத் துடைப்பதற்காக மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருக்கக்கூடிய பல தலைவர்களை கைது செய்ய வேண்டும் என இவர்கள் கூக்குரல் இடுகின்றனர்.

இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் பேச்சுரிமை, கருத்துரிமை ஆகியவற்றை பறிக்கும் வகையில் செயற்படும் இவர்களின் அநீதியான கோரிக்கைக்கு தமிழக அரசு பணிந்து பல தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்திருக்கின்றமை அப்பட்டமான ஜனநாயக உரிமைகள் மீறலாகும் - என்றார்.

# ஜனாதிபதியின் இராமநாதபுரம் வருகையால் முகாம் அகதிகள் வெளியில் செல்லத் தடை!

இராமநாதபுரம், டிச.24

ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் இராமேஸ்வரம் வருகையை முன்னிட்டு, அகதிகள் முகாம்கள் நான்கு நாள்கள் மூடப்படுகின்றன. இதனால், அகதிகள் யாரும் வெளியில் செல்ல முடியாதவாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடலோரப் பகுதிகளில் கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்த விவரம் வருமாறு-

பிரதிபா பாட்டீல், இராமேஸ்வர இராமநாத சுவாமியைத் தரிசிப்பதற்காக, வரும் 28ஆம் திகதி ஐதராபாத்திலிருந்து விமானம் மூலம் காலை 10.45 மணிக்கு மதுரை வருகிறார். அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் 11.40 மணிக்கு மண்டபம் வருகிறார்.

கார் மூலம் இராமேஸ்வரம் சென்று கோவிலில் சுவாமி தரிசனம் செய்த பின், பிற்பகல் 1.35 மணிக்கு ஹோட்டல் தமிழ்நாடுக்குச் செல்கிறார். பின்னர் பிற்பகல் 3.10 மணிக்கு மண்டபத்திலிருந்து ஹெலிகொப்டரில் மதுரை செல்கிறார்.



ஜனாதிபதி வருகையை முன்னிட்டு, நேற்று டில்லியிலிருந்து வந்த பாதுகாப்பு அதிகாரிகள் ஜனாதிபதி செல்லும் இடங்கள் மற்றும் ஓய்வு எடுக்கும் பகுதிகளில் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்தனர். பாதுகாப்பை முன்னிட்டு, வரும் நாளை முதல் 28ஆம் திகதி வரை மண்டபம் அகதிகள் முகாம்கள் மூடப்படுகின்றன. மேலும், கடலோரப் பகுதிகளில் கூடுதல் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.




# ஈழத்தமிழர் மீதான தாக்குதலை பொறுத்துக் கொள்ள முடியாது!

### இந்திய பார்வர்டு பிளாக் கட்சி

விஸ்வாஸ், டிச. 24

ஈழத் தமிழர்கள் மீது இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரக்கத்தனமான தாக்குதலைப் பொறுத்துக் கொள்ள முடியாது - என்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் பொதுச் செயலாளர் விஸ்வாஸ் கூறியுள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோவை கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னையில் சந்தித்து ஆலோசனை நடத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

அடுத்த மாதம் நான் இலங்கை செல்கிறேன் அங்கு சில அமைப்புகளை சந்தித்துப் பேச உள்ளேன். கொழும்பில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க உள்ளேன். நேதாஜியின் சீடரான என்னை எந்தச் சக்தி தடுக்கிறது என்பதைப் பார்ப்போம் - என்றார்.

இதுகுறித்து வைகோ கூறியவை வருமாறு-

விஸ்வாஸ் சிறந்த அரசியல்வாதி. அ.தி.மு.க. கூட்டணியில் பார்வர்டு பிளாக் இடம்பெற்றுள்ளது. திருமங்கலம் இடைத்தேர்தலில் வெற்றி பெற கூட்டணியுடன் இணைந்து பாடுபடப் போகிறோம் என விஸ்வாஸ் கூறினார் - என்றார்.

# புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் 16 பேர் செங்கல்பட்டு முகாமிலிருந்து பூந்தமல்லிக்கு!

செங்கல்பட்டு, டிச.24

செங்கல்பட்டுச் சிறப்பு முகாமிலிருந்து புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 16 பேர் பூந்தமல்லி சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்டனர்.

செங்கல்பட்டில் அகதிகளுக்கான சிறப்பு முகாமுள்ளது. முறையான கடவுச்சீட்டு, விஸா இல்லாமல் வருபவர்கள், புலிகளுக்கு ஆயுதம் கடத்தும்போது பிடிபட்டவர்கள் சிறப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தோர் எனச் சந்தேகிக்கப்படும் 31 பேர் உட்பட 80 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வழக்கு விசாரணைக்காக சென்னை, இராமநாதபுரம், மதுரை, திருச்சி நீதிமன்றங்களுக்குச் சென்று வருகின்றனர். முகாமில் அடைக்கப்பட்டிருந்த குணராஜ், தவராஜா, விஜய்பாண்டி ஆகிய மூன்று பேர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி நள்ளிரவு சுவர் ஏறிக் குதித்துத் தப்பினர். அவர்கள் இது வரை பிடிபடவில்லை. இச்சம்பவத்திற்குப் பின் சிறப்பு முகாமில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இங்கு விடுதலைப் புலிகளும் மற்றைய கைதிகளும் ஒன்றாக அடைக்கப்பட்டிருப்பதால் பலவேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மேலும் கைதிகள் சிலர் தங்களை விடுவிக்க வேண்டும், அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும், தங்கள் நாடுகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனக் கோரி அடிக்கடி உண்ணாவிரதம், மரத்தில் ஏறித் தற்கொலை செய்யப் போகிறோம் என மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். கடந்த 6ஆம் திகதி 10 ஆம் திகதி வரை கைதிகள் தங்கள் கோரிக்கைகளை கணினியில் அச்சிட்டு அதிகாரிகளுக்கு அனுப்பினர். ஒலிபெருக்கியை மரத்தில் கட்டி 'மைக்' மூலம் தங்கள் கோரிக்கைகளை வெளிப்படுத்தினர். இங்கு பாதுகாப்பற்ற சூழல் உள்ளதால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தோர் எனச் சந்தேகிக்கப்படுவோரை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும் என கியூ பிரிவுப் பொலிஸார் அரசுக்குப் பரிந்துரை செய்தனர்.

அதன்படி முகாமிலிருந்த பிரதீபன், பகீரதன், பொலிபால், ரோபின், அருள்குகானந்ததாஸ், அருள், செல்லகுமார், செல்வசேந்தன், ஜெயகுமார், சென்ஜான்ஸ், குமார், சதீஷ் பாரதிதாசன், கண்ணன்,கரண்,சிவகரன் ஆகியோர் முதல் கட்டமாக நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் பூந்தமல்லி சிறப்பு முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

# மண்டபத்திலிருந்தும் ஐவர்

இராமநாதபுரம், டிச. 24

இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்கு வந்த 5 பேரை புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் உளவுப்பிரிவுக் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்து சென்னை பூந்தமல்லி சிறப்பு முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைப் பகுதிக்கு கடந்த மாதம் இலங்கையிலிருந்து கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து ஏராளமான அகதிகள் வந்தனர்.

இவர்களில் ஸ்ரீதரன், தில்லைநாதன், குமரதாசன், சுதர்சன், கோகுல்ராஜ் ஆகிய 5 பேரின் நடவடிக்கையில் உளவுப் பிரிவுப் பொலிஸாருக்குச் சந்தேகம் வந்தது.

இதனைத் தொடர்ந்து நடத்திய விசாரணையில், அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் இலங்கையில் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனவும் கியூ பிரிவுப் பொலிஸார் கண்டறிந்து, அவர்கள் 5 பேரிடம் விசாரணை செய்தனர்.

இந்த விசாரணையில், விடுதலைப் புலிகள் என்பது உறுதியானதால், மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இவர்களை காவல் துறையினர் கைதுசெய்து சென்னை பூந்தமல்லி சிறப்பு முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொங்கோவில் ஐ.நா. அமைதிப்படை மேலும் ஒரு வருடம் தங்கியிருக்கும்!

கிங்ஸஸா, டிச. 24

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் அமைதிப்படைகள் தங்குவதற்கான கால எல்லையை ஐ.நா. மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடித்துள்ளது. இதற்கான தீர்மானத்தில் தீவிரவாதிகளிடமிருந்து மாத்திரமல்ல, அரச படைகளிடமிருந்து வெளியேறிய வீரர்களிடமிருந்தும் சிவிலியன்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரத்தையும் அமைதிப்படைக்கு ஐ.நா. வழங்கியுள்ளது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சமீப காலமாக அரசு துருப்புகளுக்கும், தீவிரவாதப் போராளிகளுக்குமிடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது. இதனால், 2,50,000 க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்விடங்களைக் கைவிட்டு வெளியேறியுள்ளார்கள்.

கொங்கோவில் நிலைகொண்டுள்ள அமைதிப்படைகளால் மோதல்களைத் தடுக்க முடியவில்லை. வன்முறைகள் ஒடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. எனினும், அமைதிப்படை வீரர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. மேலதிக துருப்புகள் தேவை என கள நிலை அதிகாரிகள் தெரிவித்து வந்தார்கள்.

அதிகாரிகளின் கோரிக்கைக் கிணங்க, ஐ.நாவின் புதிய ஆணை மேலதிக துருப்புகளை அனுப்பி வைக்கவும் முன்வந்துள்ளது. புதிய தீர்மானத்தின்படி, மொத்தமாக 22,000 வீரர்கள், பொலிஸார், அவதானிகள் ஆகியோரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள்.

ஓகஸ்ட் மாத முடிவில் கிழக்கு கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சண்டை மூண்டது. இதன்போது சில அரசு துருப்புகள் கூட்டாக, பரவலாக கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளன என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

கொங்கோவில் நிலைகொண்டுள்ள ஐ.நாவின் அமைதிப்படைக்கு எதிர்வரும் மாதங்களில் மேலதிகமாக 3 ஆயிரம் வீரர்கள் முதற்கட்டமாக அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள் என ஐ.நா. வட்டார அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஐ.நாவின் கோரிக்கைக்கிணங்க சில நாடுகள் மாத்திரமே தங்கள் படை வீரர்களை அமைதிப்படைக்கு அனுப்பி வைக்க இணங்கியுள்ளன. புதிதாக வீரர்களை அனுப்பி வைப்பதற்கான கோரிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் பதிலளிக்கத் தவறியுள்ளது என பி.பி.ஸி. நிருபர் தெரிவித்துள்ளார்.

## தீவிரவாதியின் கடிதத்தை வைத்து பாக். மீது குற்றஞ்சாட்டலாமா?

இஸ்லாமாபாத், டிச. 24

மும்பைத் தாக்குதலில் பிடிபட்ட பயங்கரவாதி அஜ்மல் கசாப்பின் கடிதத்தை ஆதாரமாகக் கருத முடியாது என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி மும்பையில் நுழைந்து தாக்குதல் நடத்திய பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகளில் அஜ்மல் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டார். ஏனைய 9 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் அல்லர் என அந்நாடு தொடர்ந்து கூறிவருகிறது. ஆனால், விசாரணையில் கசாப் தான் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், தானும் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் தங்களுக்கு சட்ட உதவி தேவை என்றும் கசாப் பாகிஸ்தானுக்கு எழுதிய கடிதம் திங்கட்கிழமை பாகிஸ்தான் தூதரிடம் அளிக்கப்பட்டது. ஆனால், கசாப்பின் கடிதத்தை ஆதாரமாக ஏற்க முடியாது என்று பாகிஸ்தான் பிடிவாதம் பிடிக்கிறது.

கசாப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்பதற்கு இன்னும் வலுவான ஆதாரத்தை இந்தியா அளிக்கவேண்டும் என அந்நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளார்கள் என டான் நியூஸ் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

## புஷ் மீது சப்பாத்து வீசியவர் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில்!

பக்தாத், டிசெ. 24

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷை நோக்கித் தம் பாதணிகளைக் கழற்றி எறிந்த ஊடகவியலாளர் முந்டடார் அல்-ஷெய்டிக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி மத்திய குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இம்மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற இப்பாதணி வீச்சுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முந்டடார் மீது ''வெளிநாடொன்றின் அதிபருக்கு எதிராக ஆக்கிரமிப்பை (வலுச் சண்டையை) மேற்கொண்டார்'' எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஈராக்கிய ஊடகவியலாளரான முந்டடார் அல்-ஷெய்டி 28 வயதான ஓர் இளைஞர். இவர் மேற்கொண்ட பாதணி வீச்சு சில அரபு நாடுகளில் இவரை ஒரு மாவீரராக உயர்த்தியுள்ளது. இவரை விடுதலை செய்யக்கோரி இந்தநாடுகளில் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

''இவருக்கு எதிரான வழக்கு விசாரணை இவ்வருட டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகும். பூர்வாங்க விசாரணை முடிவடைந்துவிட்டது. இவருக்கு எதிரான வழக்கு மத்திய குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுவிட்டது. அங்கு விசாரணை ஆரம்பமாகும்'' என பூர்வாங்க விசாரணையை மேற்கொண்ட நீதிவான் தியா அல்-கெனானி, ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் அதிபருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு ஊர்ஜிதப்படுத்தப்பட்டால், குற்றவாளிக்கு ஐந்து வருடங்களுக்கும் 15 வருடங்களுக்குமிடைப்பட்ட கால தண்டனை விதிக்கப்படலாமென நீதிமன்ற வட்டாரங்கள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தன.

எனினும், முந்டடாருக்கு குறைந்தபட்ச தண்டனையே விதிக்கப்படலாம். ஏனெனில், இது ஒரு 'ஆக்கிரமிப்பு எத்தனிப்பு' மாத்திரமே என ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

''எனது சகோதரர் முந்டடார் மீதான வழக்கு விசாரணை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி இடம்பெறும்'' என இவரின் சகோதரர் யு தே அல்-ஷெய்டி ஊர்ஜிதப்படுத்தினார். அத்துடன் ''தடுப்புக் காவலில் ஈராக்கிய அதிகாரிகள் அவரைக் குரூரமாகத் தாக்கி, இம்சைப்படுத்தியுள்ளார்கள்'' என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இவர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டை, பூர்வாங்க விசாரணையை மேற்கொண்ட நீதிவான் கெனானி நிராகரித்துள்ளார். ''இவர் மடக்கி கைது செய்யப்படும் போது முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவை கீறல்களே. பாரதூரமானவை அல்ல'' என இந்த நீதிவான் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

## உயிருக்கு போராடுகிறார் மைக்கல் ஜக்ஸன்

லண்டன், டிச. 24

உலகப் புகழ்பெற்ற பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜக்ஸன், நுரையீரல் நோய் முற்றியதால் உயிருக்குப் போராடி வருகிறார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரபல பொப் பாடகர் மைக்கேல் ஜக்ஸனுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். இவரது வாழ்க்கை வரலாறு பற்றி ஹால் பெரின் என்பவர் புத்தகம் எழுதுகிறார்.

லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு ஹால் பெரின் அளித்துள்ள பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

ஐம்பது வயதாகும் மைக்கல் ஜக்ஸனுக்கு 'ஆல்பா ஆன்ட்டி டிரைப்சின்' என்ற குறைபாடு இருந்து வந்தது. இது மரபணு பாதிப்பால் ஏற்படும் நுரையீரல் நோய். இதன் காரணமாக மைக்கேல் ஜக்ஸன் உடல்நிலை மிகவும் மோசமடைந்து உள்ளது. பேசுவதற்குக்கூட அவர் சிரமப்படுகிறார். அவரது இடது கண்ணில் 95 சதவீத பார்வையிழப்பு ஏற்பட்டுள்ளது.

5 ஆயிரம் அமெரிக்கர்களில் ஒருவருக்கு இந்த நோய் பாதிப்பு உள்ளது. அவருக்கு நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை தேவை. ஆனால், அந்த சிகிச்சை செய்வதற்குக்கூட அவர் உடலில் வலு இல்லை. அத்தோடு இரைப்பை, சிறுகுடல் ஆகிய பகுதிகளில் இரத்தக் கசிவும் ஏற்பட்டுள்ளது. இதைக் குணப்படுத்துவது சிரமம்.

மைக்கல் ஜக்ஸனுக்கு பல ஆண்டுகளாகவே இந்தப் பாதிப்பு உள்ளது. ஆனால், தனது டாக்டர்களின் தொடர் சிகிச்சையால் நோய் முற்றாமல் பார்த்துக்கொண்டார். ஆனால், இப்போது அவரது உடல்நிலை அபாய கட்டத்தில் உள்ளது. - இவ்வாறு ஹால்பெரின் கூறியுள்ளார்.

உலக அரங்கில்

## ஜம்மு காஷ்மீரில் 3 தீவிரவாதிகள் கைது

ஸ்ரீநகர், டிச. 24

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஜெய்ஷ்-இ-முகம்மது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 3 பேரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதன் மூலம் காஷ்மீரில் இறுதிக்கட்டத் தேர்தல் வாக்குப் பதிவின்போது நடத்தப்படவிருந்த பயங்கரவாதத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

''கைது செய்யப்பட்ட மூவரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பாகிஸ்தான் இராணுவ வீரர்'' என ஜம்மு காஷ்மீர் மாநில பொலிஸ் அதிபர் குல்தீப் குடா கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் மாரியாட் ஹோட்டலில் நடத்தப்பட்ட தாக்குதலைப் போன்ற தாக்குதலை அவர்கள் நடத்த திட்டமிட்டிருந்தனர் எனத் தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜெய்ஷ்-இ-முகம்மது தலைவர் மசூத் அசாரின் சகோதரரிடம் இவர்கள் தற்கொலைத் தாக்குதல் நடத்தும் பயிற்சியை பெற்றவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து ஐஎஸ்ஐ உதவியுடன் பங்களாதேஷ் வழியாக அவர்கள் காஷ்மீருக்குள் கடந்த 17 ஆம் திகதி நுழைந்துள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பிரேஸில் இடம்பெற வேண்டும்

### பிரான்ஸ் அதிபர் விருப்பம்

ரியோ டி ஜெனிரோ, டிச. 24

''பிரேஸிலில் சர்வதேச விவகாரங்களில் முக்கிய பங்கேற்க வேண்டும். அத்துடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் ஒரு நிரந்தர ஆசனத்தை வகிக்க வேண்டும்'' என பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷி பிரேசிலின் தலைநகரில் நிகழ்ந்த ஐரோப்பிய ஒன்றிய பிரேஸில் உச்சி மாநாட்டில் பேசுகையில் அபிலாஷை தெரிவித்தார்.

''ஜி 20 நாடுகளின் அடுத்த கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக பிரேஸிலும், ஐரோப்பிய ஒன்றியமும் பொதுப்படையான - அதேவேளை காத்திரமான ஒரு நிலைப்பாட்டை வகிக்கலாம்'' என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

''உலக ரீதியிலான முடிவெடுக்கும் விடயத்தில் லத்தீன் அமெரிக்க நாடான பிரேஸிலால் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்க முடியும். உலக நிர்வாக அமைப்பில் அதுவும் அங்கம் வகிக்க வேண்டுமென்பது எமது அவாவாகும்'' என்றும் அவர் கூறினார்.

''லண்டனில் அடுத்த ஏப்ரலில் ஜி 20 நாடுகளின் கூட்டம் நடைபெறும். இதில் பிரேசிலும், பிரான்ஸும் கூட்டாக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். வர்த்தக மக்களுக்கான ஆதரவையும், அனுசரணையையும் அடிப்படையாகக் கொண்டவையாக இவை இருக்கவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

''உலக ரீதியிலான பொருளாதார நெருக்கடிகள் முனைப்படைந்து வருகின்றன. அதனால் நன்மாற்றங்களே தேவை. இவ்விடயம் தொடர்பாகவும் ஜனாதிபதி லூபாலாவுடன் கலந்துரையாடியுள்ளேன்'' என்றும் சர்கோஷி தெரிவித்துக் கொண்டார்.

சர்கோஷி, பிரேஸில் விஜயத்தைமேற்கொண்டு ரியோ டி ஜெனிரோவை வந்தடைந்தார். இவருடன் பல பிரான்ஸ் அமைச்சர்களும், கைத்தொழிலதிபர்களும் வந்துள்ளார்கள். பல்வேறுபட்ட இரு தரப்பு உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகவுள்ளன என பி.பி.ஸியின் பிரேசில் நிருபர் ஹாஷி டவி தெரிவித்தார்.

## இஸ்லாமாபாத் பொலிஸ் நிலையத்தில் பெருமளவு ஆயுதங்கள் மாயம்

### தீவிரவாதிகளிடம் கைப்பற்றப்பட்டவையாம்

இஸ்லாமாபாத், டிச. 24

பாகிஸ்தான் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு இஸ்லாமாபாத் பொலிஸ் நிலையமொன்றில் வைக்கப்பட்டிருந்த பெருவாரியான ஆயுதங்கள் காணாமற் போய்விட்டன. இந்த மர்ம மறைவு தொடர்பாக 10 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சு தெரிவித்தது.

இஸ்லாமாபாத்திலுள்ள செம்மசூதிக்குளிருந்து தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகளிடமிருந்து இந்த ஆயுதங்கள், பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளால் மீட்கப்பட்டவையாகும் என்றும் இந்த அமைச்சு குறிப்பிட்டது.

இம்மசூதியை கடந்த ஆண்டு பாதுகாப்புப் படைகள் முற்றுகையிட்டு தீவிரவாதிகளின் தாக்குதல்களை முறியடித்து, பணயக் கைதிகளை மீட்டன. அந்தத் தருணத்தில் இந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருந்தன என்றும் அமைச்சு விவரித்தது.

கைப்பற்றப்பட்ட பெருவாரியான ஆயுதங்களில் ரொக்கெட்டுகள், ஏவுகணைகள், டசின் கணக்கான இயந்திரத் துப்பாக்கிகள், தன்னியக்க ரைபிள்கள் ஆகியவையும் அடங்கும். கைப்பற்றப்பட்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கும் இவை காட்டப்பட்டன என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் விளக்கினார்.

''கடந்த வருட ஜூலையில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகள் இம்முற்றுகையை மேற்கொண்டன. தலிபான் பாணியில் தாக்குதல்களை மேற்கொண்ட இஸ்லாமிய தீவிரவாதிகள் படை அதிகாரிகளின் கட்டளைக்கிணங்க சரணடைய அடியோடு மறுத்துவிட்டார்கள். அதனால் முற்றுகை ஒருவார காலம் நீடித்தது'' என்றும் அவர் கூறினார்.

''படையினருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே மூண்டுவந்த கடும் மோதல்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இறுதியில் கொமோண்டோ படைகள் அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டன. இதில் பெருந்தொகையான தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள்'' என்றும் அமைச்சுப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

''கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் காணாமற் போயுள்ளமை கடந்த வாரத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இவை ஒரே தினத்தில் கடத்தப்பட்டவை அல்ல. திட்டமிட்டு படிப்படியாகக் கடத்தப்பட்டுள்ளன'' என்றும் அவர் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''இந்த மர்ம மறைவு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 10 பொலிஸாரில், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அடங்குவார். இவர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்'' என்றும் அவர் மேலும் விவரித்தார்.

## மும்பையில் பிடிபட்ட தீவிரவாதியிடம் அமெ. புலனாய்வாளர்கள் விசாரணை

மும்பை, டிச. 24

மும்பையில் பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி அஜ்மலிடம் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐயின் அதிகாரிகள் 9 மணி நேரத்திற்கும் மேலாக விசாரணை நடத்தினார்கள்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி மும்பையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டு உயிருடன் பிடிபட்ட லஷ்கர் - இ - தொய்பாவின் ஒரே தீவிரவாதியான முகமது அஜ்மல் அமீரிடம் இந்திய அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐயின் அதிகாரிகளும் கடந்த 3 வாரங்களுக்கும் மேலாக மும்பையில் முகாமிட்டு உள்ளனர்.

அவர்கள் தீவிரவாதி அஜ்மலிடம் 9 மணி நேரத்திற்கும் மேலாக விசாரணை நடத்தினர்கள். பயங்கரவாதத் தாக்குதலில் அஜ்மலின் தொடர்பு, இதில் தொடர்புடைய பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகள் ஆகியவை குறித்து இந்த விசாரணை நடத்தப்பட்டது.

அஜ்மலின் சொந்த ஊர் குறித்த துல்லியமான விவரங்களையும் எப்.பி.ஐ. அதிகாரிகள் இந்த விசாரணையின்போது கேட்டுள்ளனர். பாகிஸ்தானின் பரீத்காட் மாவட்டத்திலுள்ள உக்காடு என்ற பகுதியைச் சேர்ந்தவர் அஜ்மல் என்று தகவல்கள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

அவருக்கு எங்கு பயங்கரவாத பயிற்சி அளிக்கப்பட்டது? அவருக்கு பயிற்சி அளித்தவர்கள் யார்? என்பன போன்ற பல்வேறு கேள்விகள் இந்த விசாரணையின்போது கேட்கப்பட்டன என தகவல்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்கை விலைகூட்டி விற்பனைக்கு விட்டமை குறித்து அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.24

குடாநாட்டுக்கு 'யால' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட உருளைக்கிழங்கை விலைகூட்டி விற்கப்பட்டமைக்கான தனது தரப்பு நியாயங்களை விளக்கி அரச அதிபர் கே.கணேஸ் அறிக்கை ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் கப்பல் மூலம் அனுப்பப்பட்ட உருளைக்கிழங்கை 75 ரூபா - 80 ரூபாவுக்குள் விற்பனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததாக ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது. எனினும் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 86 ரூபாவாக செயலகத்தால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட விலைக்கும் அதிக விலைக்கு விற்றமை ஏன் என்பது குறித்து யாழ். அரச அதிபரிடம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் விளக்கம் கோரியது குறித்த செய்தி உதயனில் நேற்று வெளியாகியது தெரிந்ததே.

அது தொடர்பாக "உருளைக்கிழங்கு விலை கூட்டி விற்கப்பட்டமை ஏன்?" என்ற தலைப்பில் அரச அதிபர் நேற்று அனுப்பியுள்ள அறிக்கை வருமாறு:-

'யால' கப்பல் மூலம் யாழ்.மாவட்டத்துக்கு எடுத்துவரப்பட்ட உருளைக்கிழங்கு அரசாங்க உணவுக் களஞ்சியத்தில் வைத்து ப.நோ.கூ. சங்கங்களின் பிரிவிற்குட்பட்ட மக்கள் தொகைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டு ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட மழை மற்றும் புயல் காரணமாக ஏற்பட்ட மரக்கறிகளின் தற்காலிக தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு உடனடியாக 200 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு அனுப்பி வைக்கும்படி என்னால் கோரப்பட்டதற்கிணங்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் 100 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 77 ரூபா விலையில் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

களஞ்சியத்துக்கு கிடைக்கப்பெற்ற மொத்த உருளைக்கிழங்கு 97,173 கிலோ கிராம் ஆகும். மிகுதி 2,827 கிலோ கிராம் உருளைக்கிழங்கும் சோர்வு மற்றும் பழுதடைந்த காரணத்தால் எமக்கு கிடைக்கப்பெறவில்லை.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் யாழ்.மாவட்டத்துக்கு பொருள்கள் அனுப்பி வைக்கும் போது ஏற்படும் துறைமுக தொழிலாளர் கூலி, துறைமுகப் படகுக் கூலி, துறைமுகத்திலிருந்து களஞ்சியங்கள் வரையான பாரவூர்திக் கூலி மற்றும் களஞ்சியத்தில் பொருள்களை இறக்கி ப.நோ.கூ. சங்கங்களுக்கு மீளவும் ஏற்றும் செலவு ஏனைய செலவுகள் அனைத்தும் ஈடுசெய்யும் பொருட்டு மாவட்டச் செயலகத்தினால் ஒரு கிலோவுக்கு 2 ரூபா நிர்ணயிக்கப்பட்டு பொருள்களின் விலை நிர்ணயிக்கப்படுகின்றது. அந்த வகையில் உருளைக்கிழங்கும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கும் விலை 79 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

ப.நோ.கூ. சங்கங்கள் அரசாங்க உணவுக் களஞ்சியத்தில் இருந்து பொருள்களைப் பெற்று சில்லறை விற்பனை கிளைகள் மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கும் வரையான செலவீனங்களை ஈடுசெய்யும் பொருட்டு வழமையாக 3 ரூபா பொருள்களின் விலையுடன் சேர்த்து விற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உருளைக்கிழங்கு பொதி செய்யப்பட்ட நிலையில் உடனடியாக ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையால் அப்பொதிகளில் ஏற்பட்ட 2,827 கிலோ கிராம் சோர்வு, போக்குவரத்துச் செலவு, களஞ்சிய இறக்கல் கூலி, கிளைக்குரிய விநியோகச் செலவு என்பவற்றை உள்ளடக்கி ப.நோ.கூ. சங்கங்களுக்கு நட்டம் ஏற்படாமலும் விற்பனையில் 6 சதவீதம் இலாபம் பெறப்படவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் அதன் கொள்விலையான 79 ரூபாவுடன் கிலோவுக்கு 7 ரூபாவும் சேர்த்து ப.நோ.கூ. சங்கங்களின் சில்லறை விற்பனை விலை ரூபா 86/= என எம்மால் தீர்மானிக்கப்பட்டது. மேலும் உருளைக்கிழங்கு பழுதடைதல் மற்றும் உடனடியாக விநியோகிக்க வேண்டியுள்ளதால் இத்தொகையை அதிகரித்து ரூபா 9.00 ஆகத் தரும்படி ப.நோ.கூ. சங்கங்கள் கோரிக்கை விடப்பட்ட போதும் உரிய கணிப்பீடுகள் ஒரு கிலோவுக்கு மேற்கொள்ளப்பட்டு ரூபா 7/= வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

* களஞ்சியங்கள் கொள்வனவு செய்யும் போது ஏற்பட்ட குறைவு - 1 ரூபா 89 சதம்.
* ப.நோ.கூ. சங்கங்களின் விநியோகத்தின்போதான எதிர்பார்க்கும் குறைவு 2 ரூபா 29 சதம்.
* ப.நோ.கூ. சங்கங்களின் இலாபம் மற்றும் இதர செலவுகள் 2 ரூபா 82 சதம்.

இவ்வாறு பொருள்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு ப.நோ.கூ. சங்கங்கள் நட்டமடையாத வகையில் உடனடியாக விநியோகம் செய்யப்படல் வேண்டும் என்பதற்காகவும் இவ்விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ள உருளைக்கிழங்கு நியம நிறையில் கிடைக்கப்பெறாமையினாலும், பழுதடைந்தமையாலும் புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்துக்கு 480,600 கிலோ கிராம் உருளைக்கிழங்கும் அனலைதீவு ப.நோ.கூ. சங்கத்துக்கு 372,400 கிலோ கிராம் உருளைக்கிழங்கும் வழங்கப்பட வில்லை என்பதனையும் அறியத்தருகின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம்- டிசெ.24

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் தொடர்பான நேர்முகப்பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளையும், வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள சமுர்த்தி முகாமையாளர்களையும் அமைச்சர் இன்று சந்திக்கவிருக்கிறார் என்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கனைச் சந்தையில் நேற்று மரக்கறி விலைகள் ஓரளவு வீழ்ச்சி

சங்கானை,டிசெ.24

சங்கானை மரக்கறிச் சந்தையில் கத்தரிக்காய் தவிர்ந்த ஏனைய மரக்கறிகள் சற்றுக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

நேற்றைய விலை விவரம் கிலோ ஒன்றுக்கு வருமாறு:-

பயற்றங்காய் ரூ 150, புடோலங்காய் ரூ.120, மோதகவள்ளிக்கிழங்கு ரூ. 140, பாகற்காய் ரூ 200, பூசணிக்காய் ரூ. 80, கரட் ரூ.100, கோவா ரூ.90.00, மரவள்ளி ரூ. 60-80.

இம் மரக்கறிகள் வெள்ள அனர்த்தத்தின் பின் 300 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இங்கு கடல் உணவு வகைகளையும் ஓரளவு குறைந்த விலையில் கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது. (அ-29)

# சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 42 பேருக்கு நியமனம்

## முதலாம் திகதி கடமையை பொறுப்பேற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கு மாகாண சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் ஆரம்ப தரம் (தரம்111) பதவிக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 42 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம் பெறும் 42 பேரையும் திருகோணமலையில் உள்ள வடக்கு மாகாண சுகாதாரச் சேவைகள் பணிமனையில் எதிர்வரும் முதலாம் திகதி சமுகமளித்து கடமையைப் பொறுப்பேற்கும்படி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

அமிர்தலிங்கம் தர்சானி- கைதடி மேற்கு, கஜபதி பிரதீபா காயத்திரி- கொக்குவில் கிழக்கு, கனகரட்ணம் பிரேமலதா- ராஜ வீதி, நல்லூர், வரதராஜா சஜீபன்- கோப்பாய் தெற்கு, ராஜதுரை அபிராமி, சாவகச்சேரி, மாணிக்கவாசகர் அனுசானந்தி- ஆறுகால் மடம், ஆனைக் கோட்டை, கவீந்திரன் தர்மினி- சித்தன்கேணி, தங்கராஜ் கீர்த்தனா-மீசாலை, வடிவேல் அரவிந்தன்-குரும்பசிட்டி, புலோலி, காந்தராஜ் ஹேமா-அராலி தெற்கு, கணேசலிங்கம் கஜேந்தினி- குப்பிளான் வடக்கு, முத்துக்குமாரு ஜவனறூபி- குப்பிளான் தெற்கு, சிவராசா சாரங்கன்- ஏழாலை மேற்கு, சச்சிதானந்தஐயர் சயிதா - கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு, வேலுப்பிள்ளை சுபாஜினி- பிரம்படி லேன், கொக்குவில், இராஜதுரை தீபனா- சாவகச்சேரி, ஏரம்பமூர்த்தி கார்த்திகா- ஊரெழு மேற்கு, குமாரவேல் துளசி- கோவில் வீதி, நல்லூர், வேலாயுதபிள்ளை கிரிசாம்பாள்-மிருசுவில் வடக்கு, தவராஜா சுரேகா-கொக்குவில் கிழக்கு, குமாரசாமி மீரா- செம்மணி வீதி, நல்லூர், சிவராஜா றீகன் - மானிப்பாய், கிருபானந்தமனுநீதி மதுமைதா- துன்னாலை மேற்கு, வசந்தரூபன் ராதிகா- இமையாணன் வடக்கு, சிவசுப்பிரமணியம் விநோதா- கரவெட்டி மத்தி, சிவ்கடாச்சனயம் தனுஷா-மீசாலை கிழக்கு, சின்னராசா ரஜீவன்-ஏழாலை கிழக்கு, கிருஸ்ணராஜ் பிருந்தவன்-அல்வாய், நெல்லியடி கிழக்கு, யோகேந்திரன் சசிரேகா-கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம், சிவகுமாரன் வித்தியதாசன்- மீசாலை கிழக்கு, ஜசிகா நித் தியானந்தன்- வண்ணார் பண்ணை, கனகரட்ணம் கிரிதரன்- பருத்தித்துறை வீதி, நல்லூர், சதாசிவம் வனஜா- தும்பளை மேற்கு, நல்லையா நேசமீரா- மீசாலை வடக்கு, சிறிநிலாமேகநாதன் பிரதீபன்- ராஜ வீதி, கோப்பாய் வடக்கு, நல்லதம்பி சுகிதா- சாவகச்சேரி, சிறீக்குமார் சிறிப்பிரியா-பிறவுண் றோட், இரட்ணசிங்கம் கௌசிகா- அரியாலை, தெய்வேந்திரா சௌமியா-உரும்பிராய் தெற்கு, சிவகுமாரன் சிவானந்தன்-உரும்பிராய் தெற்கு, தாட்சாயினி பொன்னம்பலம்-கோண்டாவில், சிவானந்தன் சிவரூபினி-நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## வடமராட்சியில் திருவாசக முற்றோதல்

வடமராட்சி,டிசெ. 24

மேலைப்புலோலி தெனி அம்மன் கோவிலில் நாளை வியாழக்கிழமையும், வாணர்குடியிருப்பு, சொக்கன்கலட்டி முத்துமாரி அம்மன் கோவிலில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும், காலை 7மணி முதல் மாலை 5மணிவரையும் திருவாசக முற்றோதல்கள் இடம்பெற வுள்ளன.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், அதன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஓதுவார் குழுவினர் திருவாசக முற்றோதலை நிகழ்த்துவார்கள். (1-236)

## மயங்கி வீழ்ந்து சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம்- டிசெ.24

கடமையிலிருந்த சிப்பாய் மயங்கி வீழ்ந்து மரணமானார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாழ் முகாமில் இடம்பெற்றது.

முகாமைச் சேர்ந்த என்.எஸ்.எம்.வம்சநாத(வயது 19) என்னும் சிப்பாயே மரணமானவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். (1-207)

# இரண்டு சகோதரர்கள் உட்பட நால்வர் ஆணைக்குழுவில் நேற்றுச் சரண்

வலி வடக்கு, டிசெ.24

சகோதரர்கள் இருவர் உட்பட நான்கு இளைஞர்கள் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். அலுவலகத்தில் நேற்றுச் சரண டைந்தனர்.

வரணி வடக்கைச் சேர்ந்த 25 வயதான கூலித் தொழிலாளி, 26வயதான மேசன் தொழிலாளி ஆகிய சகோதரர்களும் 28 வயதான கூலித் தொழிலாளியான குடும்பஸ்தரும் சரணடைந்துள்ளார்கள்.

மற்றும் வடமராட்சி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 20 வயதான தச்சுத் தொழிலாளியும் சரணடைந்துள்ளார்.

இவர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு யாழ். நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (1-86-25)

# வேட்புமனுத் தாக்கல் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 24

எதிர்வரும் மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

இன்றுமுதல் இம்மாதம் 31ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ள இன்றுமுதல் கச்சேரிகள் தயார் படுத்தப்பட்டுள்ளன என்று மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தங்களது வேட்பாளர்கள் பட்டியலை நிறைவு செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசு தனது வேட்பாளர்கள் பட்டியலை இன்று நிறைவு செய்யும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஐ.தே.கட்சி இன்று அல்லது நாளை தனது வேட்பாளர்கள் பட்டியலை கூட்டணிக்கட்சிகளுடன் இணைந்து பூர்த்தி செய்யும் என்று அக்கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது. (சி)

# மத்திய, வடமேல் மாகாணத் தேர்தலில் அமைச்சர்களின் வாரிசுகள் களத்தில்!

## எம்.பி. பதவியை பிடிக்கும் ஆரம்ப முயற்சி என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.24

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசின் சார்பில் போட்டியிடுவதற்காக அமைச்சர்களின் பிள்ளைகளும், உறவினர்களுமே வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆக்குவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. எம்.பி இராமலிங்கம் சந்திரசேகரன் இதைச் 'உதயனு'க்குத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜே.வி.பி. மாகாணசபை முறைமையை எதிர்த்துக்கொண்டுதான் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டுக்கொண்டு வருகிறது. இந்தமுறையும் அப்படித்தான்.

மாகாணசபை முறைமை இந்தியாவால் இந்நாட்டுக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்று. மாகாணசபைகளின் ஊடாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. மக்களின் பணத்தை விரயம்செய்யவே இந்த மாகாணசபை முறைமை துணைபோகிறது. இச்சபைக்கு மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தயார்செய்யும் பயிற்சிப் பட்டறையாகவே மாகாணசபைகள் உள்ளன - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்கு நீக்கப்படும் என்றும் நாளை வியாழக்கிழமை வழமையான நேரத்துக்கு ஊரடங்கு நடைமுறைக்கு வரும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைநோக்கி சென்றுகொண்டிருப்பதாக பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகரில் குறைந்த எண்ணிக்கையான அரச ஊழியர்களும் பொதுமக்களுமே தங்கியுள்ளனர்.

ஏனையோர் - மிகப்பெரும் எண்ணிக்கையானோர் தமது உடைமைகளுடன் நேற்று இடம்பெயர்ந்ததாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று வீழ்ந்து வெடித்த ஷெல்களில் சிலாவத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை பொன்ராசா (வயது-31) என்பவர் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு, குமுழமுனைப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 7 மணிமுதல் மாலை 4.30 மணி வரையில கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது குமுழமுனைப் பகுதி முழுவதும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் இரு தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## அமைச்சரவையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைக் கூட்டத்தில் பெற்றோ லின் விலையில் மாற்றம் செய்வதா என்பது குறித்து ஆராய் வது என முடிவாகியது.

பெற்றோலின் விலையை (ஒருலீற்றர்) 122 ரூபாவிலிருந்து 100 ரூபாவாகக் குறைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் இம்மாதம் 17 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருந்தது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு உத்தியோக பூர்வமாக அரசுக்குக் கிடைக்கவில்லை என்று கூறி இது குறித்து முடிவுசெய்வதை அமைச்சரவை முறைக்குமுறை ஒத்திவைத்து வந்தது தெரிந்ததே. பெற்றோலின் விலை மாற்றம் குறித்து முடிவுசெய்வதற்கென நேற்று (வழமைக்கு மாறாக - புதன்கிழமைக்கு பதிலாக-செவ்வாய்க்கிழமை) விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதேவேளை-

இந்தியன் ஒயில் கொம்பனி நீதிமன் றத் தீர்ப்புக்கு இணங்க பெற்றோல் விலையை 100 ரூபாவாக குறைத்துள்ளது. (அ)

## நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பு கூட்டுவதா இல்லையா என்று அமைச்சரவையே தீர்மானிக்கும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தன்னால் தனித்து முடிவெடுக்க முடியாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஐ.தே.கட்சியினரிடம் தெரிவித்துள்ளார் என்றும் பிரதமர் அலுவலக வட்டாரம் கூறுகின்றது.

இதனால், அரசுக்கு நாட்டின் பொருளாதாரம் மீது அக்கறை இருந்தால் புதுவருடத்திற்கு முன் நாடாளுமன்றத்தை அரசு கூட்டவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்க நேற்றுக் கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த அரசிடம் உண்மையான திட்டங்கள் இருந்தால் அரசு விவாதத்திற்குப் பயப்படாமல் நாடாளுமன்றத்தைக் கூட்டும் என்றும் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் சம்மதித்தால் மாத்திரமே அதற்கு முன்னதாக நாடாளுமன்றம் கூட்டப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## நெடுங்கேணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணியை மீட்டு அதன் பின்னர் அடுத்த சில தினங்களில் புலிகளின் வடக்கின் முக்கிய பகுதியை கைப்பற்ற நாம் திட்டமிட்டுள்ளோம்' என்று அவர் கூறியுள்ளார்.

தற்சமயம் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கையை படையினர் நிறுத்துவதற்குத் தயாரில்லை; அதற்கான உத்தேசம் எதுவுமே இல்லை. விடுதலைப் புலிகள் இப்போது சகல முனைகளிலும் தோற்கடிக்கப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தோல்வியைத் தவிர்ப்பதற்காக போர் நிறுத்தம் ஒன்றை வருவிக்க முயற்சிக்கிறார்கள்.

எனவே படையினரிடம் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தும் அல்லது குறைத்துக்கொள்ளும் எண்ணம் அறவே இல்லை. அவர்களின் படை நடவடிக்கை தங்கு தடையின்றித் தொடரும்.

போர் நிறுத்தம் அறிவிக்கப்படும் போது வழமையாக ஒன்றிணைந்து தம்மைப் பலப்படுத்தவே விடுதலைப் புலிகள் பயன்படுத்தி உள்ளார்கள். இந்தத் தடவை படையினர் புலிகளின் தந்திரத்துக்கு சந்தர்ப்பம் வழங்கத் தயாராக இல்லை - என்றார் அவர். (அ-1)

## செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையான சுந்தரலிங்கம் கெங்காதரன் (வயது - 45) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

பருத்தித்துறையில் இருந்து பஸ்ஸில் வந்த இவர் நல்லூர் சிவன்கோயிலுக்கு மேற்கே உள்ள பஸ் தரிப்பில் இறங்கி வழமைபோல கோயில் வீதியூடாக அவரது அலுவலகத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோதே இவர் ஆயுததாரிகளின் சூட்டுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அலுவலகம் உட்படப் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார். யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை யின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (203-25-86)

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ரொய்ட்டர்' செய்திச் சேவைக்கு அளித்த மின்னஞ்சல் பேட்டியிலேயே விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய வேண்டுமென அரசு நிபந்தனை விதித்துள்ளதால் தற் போதைய சூழ்நிலையில் சமாதானப் பேச்சு சாத்தியமில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் யுத்தத்தில் சில பின்னடைவுகளைச் சந்தித்துள்ளமையை ஏற்றுக் கொண்டுள்ள அவர், எனினும் தங்களிடம் திருப்பித் தாக்குவதற்கான வழிமுறைகள் பலவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் பொருளாதாரத்தை சீர்குலைப்பது அதிலொன்று என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசின் பொருளாதாரத்தை அழிப்பதும் எமது தற்பாதுகாப்பு யுத்தத்தின் ஒரு பகுதி. அரசின் பொருளாதாரம் அழிக்கப்படும்போது தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை பலவீனப்படுத்தப்படும்.

கிளிநொச்சி மோதலில் படையினருக்கு நல்ல பாடம் படிப்பிப்போம் என சூளுரைத்துள்ள அவர், விடுதலைப் புலிகள் அத்தகைய தாக்குதலொன்றை மேற்கொள்வதற்கான காலம் , இடம், நேரம் ஆகியவற்றுக்காகக் காத்திருக்கின்றனர் - என்றார் நடேசன்.

''எமது இராணுவத்திறன் அப்படியே உள்ளது. ஆயுதங்களைப் பெறுவதிலும் எமக்குப் பிரச்சினைகளில்லை'' என்றும் நடேசன் கூறியுள்ளார்.

''நிலங்களை இழப்பதும் அவற்றை மீண்டும் மீட்பதும் பொதுவான விடயங்கள். நாம் வெல்லும்வரை, எமது இலக்கு எய்தப்படும் வரை எமது போராட்டம் தொடரும். புதிய நகரங்களை உருவாக்குவோம். இழந்த நிலங்களை மீட்போம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-சி)

## சின்னப் பரந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது; நேற்று அதிகாலை முதல் குறித்த பகுதியினூடாக முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்ட படையினர் மீது விடு தலைப்புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் போது பதில் தாக்குதலை நடத் திய படையினர் விடுதலைப்புலிக ளால் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 300மீற்றர் நீளமான மண்மேடுகளைத் தகர்த்தவாறு அப்பகுதிகளை தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

அத்துடன் நேற்று காலை முழுக் கட் டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள ஏ35 பாதையில் அமைந்துள்ள சின்னப் பரந் தன் பகுதியில் சோதனை நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-01)

## இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வால்டர் குயுலிங் வன்னியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்து தங்கியுள்ள பொதுமக்களை ஆயுததாரிகளுடன் தொடர் புண்டா என்று சோதிப்பதில் மற்றும் விசாரணை செய்வதில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளை தவறாது கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு பாதுகாப்பான பகுதியென நம்பும் அல்லது தாம் விரும்பிய பிரதேசத்துக்கு செல்வதை தடுப்பதாக கிடைத்துள்ள அறிக்கைகள் குறித்தும் வால்ட்டர் குயுலிங் தமது கடிதத்தில் பிரஸ்தாபித்துள்ளார்.

வன்னியில் உள்ள மக்களுக்கு தேவைப்படும் மனிதாபிமான பணிகளை செய்வதற்குச் சம்பத்தப்பட்ட பணியாளர்கள் பாதுகாப்புடன் சென்று உதவுவதற்கான வழிமுறை ஒன்றுக்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புக்களும் பொதுமக்களை - இடம்பெயர்ந்தவர்களை - மனித கேடயங்களாக பயன்படுத்தக்கூடாது என்ற சர்வதேச மனிதாபிமான சட்டத்தை வழுவாது கடைப்பிடிப்பது முக்கியமானது - என்றும் வால்டர் குயுலிங் தமது நேற்றைய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (அ)

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
RDS Building, K.K.S Road, Mallakam.
Website : www.iitjaffna.com
TP : 021 4591920 Email : iit@iitjaffna.com

கணனிக்கற்கைநெறிகளுக்காக IIT வழங்கும்
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் – 2008

IIT இனால் முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும் ( பொது அறிவு, நுண்ணறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் 90%, 75%, 50%, 40% வரையான கட்டணச்சலுகையுடன் பின்வருவனவற்றில் ஏதாவதொரு கற்கைநெறியை பயில்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்கின்றீர்கள்.

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Software Engineering
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Networking
- Diploma in Web Designing
- Diploma in Video Editing
- Diploma in Internet & Email
- Diploma in Maya
- Diploma in AutoCAD
- Diploma in Accounting Package

காலம் 28.12.2008

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி சின்னத்துரை (சாம்பசிவம்)

அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி K.V.K. அரிசி ஆலை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி சின்னத்துரை நேற்று (23.12.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2008) நண்பகல் 12மணியளவில் உடுப்பிட்டி K.V.K அரிசி ஆலை ஒழுங்கையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுப்பிட்டி முள்ளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.V.K.அரிசி ஆலை,
உடுப்பிட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

NEC
Clock Tower Road, Jaffna
(பெருமாள் கோவிலுக்கு அருகில்).
A/L 2011
கணித, உயிரியல் பிரிவு
ஆரம்பம்: 28.12.2008
ஞாயிறு காலை 8.30 மணி

| | |
|---|---|
| இரசாயனவியல் S.வாசு | பௌதிகவியல் K.செல்வன் |
| உயிரியல் V.A.ஞானேந்திரன் | இணை.கணிதம் S.பூநட் |

SUBRA(14) கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
வழிகாட்டல் கருத்தரங்கு
2011 A/L மாணவர்களுக்கானது
காலம்: 26.12.2008 (வெள்ளி) 3 - 6
இடம்: வட்டு. இந்து நவோதயாக் கல்லூரி, சித்தன்கேணி
வளவாளர்கள்
திரு.க.தேவராஜா
(பீடாதிபதி, வணிக முகாமைத்துவபீடம்)
கலாநிதி வை.மிகுந்தன்
(தலைவர், விவசாய பீடம்)
கலாநிதி க.வேல்நம்பி
(சிரேஷ்ட விரிவுரையாளர், வணிக முகாமைத்துவ பீடம்)
எதை? எவ்வாறு? தெரிவுசெய்வதன் வாயிலாக வெற்றிபெறலாம். அரியதோர் சந்தர்ப்பம் ஆசனங்கள் வரையறுக்கப்பட்டவை.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Dip In Computerized Accounting
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D
International Courses...
*MCP *MCSE *MCTS *MCSD
*CISCO *A+ *N+ *SUN JAVA *CIW *Dell
*ComTIA SECURITY+ *HP *Adobe *IBM *Linux
Degree Course *BIT Semester 1,3 & 5
## இன்றும்,நாளையும் பதிவுசெய்வோருக்கு கட்டண சலுகை
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
UNDP/JRRP
www.mcsitacademy.com

ஆரம்பமாகிறது
A/L 2011
கலை, வர்த்தக வகுப்புகள்
BEACON
யாழ்ப்பாணம்
ஆரம்பம் - 03.01.2009
காலை 8 மணி, புதன்

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
இலவசக் கணினிக் கருத்தரங்கு
காலம் :- 25.12.2008 நாளை (கிறிஸ்மஸ் தினம்) காலை : 9.30
இடம்:- CB Computer Academy விரிவுரை மண்டபம்.

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு (சின்னண்ணை)



உருட்டாவளை, கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு 19.12.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற குமார், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் வள்ளியம்மை கனகசுந்தரம், அம்பிகை - ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோகன்குமார், பாமா, சாரதா, இந்திரசித், பாமினி, துசியந்தன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் தேவகணேசன், காலஞ்சென்ற ரவிக்குமார், உதயகுமார், பாலகுமார், வனித்தா, கவிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உருட்டாவளை,
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.

தகவல்:
அம்பிகை - ஆறுமுகம்
(சகோதரி).
தொ.பே.: 060 221 2688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.